THE

# TAMIL TEXT

FOR THE

# MATRICULATION EXAMINATION

OF THE

## University of Madras,

DECEMBER, 1908.

PRICE 12 ANNAS.

Madras:

S. P. C. K. PRESS, UNIVERSITY PRINTERS, VEPERY.

1907.

# பொருள் அட்டவணை.


அரிச்சந்திர புராணம்:—

வேட்டஞ்செய் காண்டம் .... .... .... .... .... 1

ஆசாரக்கோவை .... .... .... .... .... .... 19

நான்மணிக்கடிகை .... .... .... .... .... .... 25

தாயுமானசுவாமிகள் பாடல் .... .... .... .... 31

பெருமாள் திருமொழி .... .... .... .... .... 35

மக்பெத் .... .... .... .... .... .... .... 37

பஞ்சதந்திரம்:—

லப்தஹானி அல்லது பேறழிவு .... .... .... .... 61

# அரிச்சந்திர புராணம்.

நான்காவது

## வேட்டஞ்செய் காண்டம்.

1. நிலவுகாலுநெடுநிங்குடைமன்னவன்
புலவுவாயபுலிமுதல்யானைவையும்
சுலவுதானைதொடர்தரவேட்டஞ்செய்
செலவுமேவியசெய்திவிளம்புவாம்.

2. செல்லுமென்னப்பணிந்தவர்சேறலும்
வெல்லும்வெம்படைவேந்தனமைச்சர்காள்
கொல்லுமிந்தக்கொடுவினைக்கென்செய்நோ
சொல்லுமென்னத்தொழுதவர்சொல்லுவார்.

3. கூட்டவேடருங்கோலும்வைவேலுநா
யீட்டமுங்கொடுகானகத்தெய்திநீ
வேட்டையாடிவிலங்கினமாய்த்தனை
நாட்டையோம்பனலனெனக்கூறினார்.

4. என்றமைச்சரியம்பலுமன்னவன்
நன்றுநன்றெனநண்ணிமனக்கொளாக்
குன்றவாணரைக்கூட்டிக்கொணர்கென
நின்றதூதர்தொழுதயனீங்கினார்.

5. ஓடினார்களுயர்வரைக்கானகம்
நாடினார்கணன்னாயகனுங்களைத்
தேடினானென்றுசெப்பலுஞ்சிற்சிலர்
கூடினார்துடிகொட்டினரெங்குமே.

6. அந்தவேலையருஞ்சுரம்யாவினும்
கந்தன்மேவுகுறிஞ்சிக்கடத்தினும்
குந்தம்வேல்சிலைகூன்குணில்கொண்டவண்
வந்தவேடர்வரவுவிளம்புவாம்.

வேறு.

7. பீலிகட்டியதன்மீதுமொய்த்தொளி
பிறங்குசொட்டைகளணைத்துநீள்
மாலையிட்டுவளர்குஞ்சிதுஞ்சநெல்
வரிந்திறுக்கிமலர்சூடியே
காலினிற்றொடுசெருப்பணிந்துகழல்
கட்டிநீடுடிகறங்கவை
வேல்பிடித்துடலம்வேர்வரும்பிட
விரைந்துவந்தனரனந்தரே.

8. கொலையெடுத்தசமனுறைவதற்குரிய
கூடெனத்தகையதூணியில்
கலையெடுத்தபிறையனையமுத்தலைய
கணைநிறைத்துவளர்மார்பினில்
மலையெடுத்தனையபுயமணைத்திறுக
வார்விசித்துவருகாரெனச்
சிலையெடுத்துவிழிகனலெழுக்கடிது
சென்றவேடுவரனந்தரே.

9. பணிலமொத்தபலகறைநிறைத்தபல
கவசமிட்டுவெகுதுவசராய்
அணிமயிர்க்கரடிமதகரித்திரள்கள்
புலிமுதற்கிரியினளவவாய்க்
கணிலெதிர்த்தவைகள்காவிலுற்றவைக
டுணிபடக்கருவியெறியுமக்
குணிலெடுத்துலகநிறையவந்தனர்கள்
கோடிகோடிகொலைவேடரே.

## வேட்டஞ்செய் காண்டம்.

10. வென்றிமத்தகமதக்களிற்றினெடு
வெண்மருப்பில்விளைமுத்தமும்
குன்றிமுத்துநிரையொக்கவைத்தகன
கோவைமார்பினிடைதாழவே
பன்றியிற்பருமருப்பிணைத்தெழில்
பயின்றகண்டிகையணிந்துயிர்
கொன்றுதின்பதுவிரும்பிவந்தனர்
குடாரவேடரொருகோடியே.

11. அந்தரத்திடியெனக்குரைத்துமுகி
ராழிபோலுறுமிவார்தடங்
கந்தரத்திறுகநின்றுராப்பியிரு
கான்மடக்கியெதிர்தாவியே
தங்களிற்கறுவுகொண்டுபல்பல
தயங்கவெங்கனறடங்கணூற்
சிந்திடச்சருவிமுன்கறித்துவரு
செஞ்சுணங்குசதகோடியே.

12. வெண்டையங்கவடிகண்டைவாரெழில்
விளங்குவெங்கனகளங்களும்
தண்டைகிண்கிணிசிலம்புநின்றொலி
தழங்கிடுங்கடியதாள்களும்
துண்டவெண்பிறையிரண்டுநின்றெதிர்
துளங்கவெட்டெயிறுமாகவே
மண்டலங்குழியவந்தஞாளிபல
வண்ணமுள்ளசதகோடியே.

13. வால்சுருண்டுநுனிவாய்வளர்ந்துதட
மார்பகன்றிடைசிறுத்துவெர்
மேலுயர்ந்தணிசிரம்பருத்துநெடு
வீரவாளெயிறிலங்கிட

---

குடாரம் — கோடரி.

## அரிச்சந்திர புராணம்.

நாலுகின்றமணியாரமென்றுநெடு
நாகிமிர்ந்துமிளிதாழவே
காலுயர்ந்துகிர்விளர்த்துமொய்த்துவரு
கரியநாய்கள்சதகோடியே.

14. நிலையுயர்ந்துலவுநீலமால்வரைக
ணிகரெனப்பிடரிணுகநிமிர்இத்
தலையிறக்கியகல்வாயில்வெண்ணுரை
தயங்கநாமுழுமிறங்கவே
அலையெழுஞ்சலதியொலியெனக்கதறி
யணிகரும்பகடிழுக்கநீள்
வலைகளுந்திரையும்வாரும்வன்கயிறும்
வந்தவன்சகடனந்தமே.

15. இமையமந்தரமுதற்றடங்கிரியு
மிதனிடைப்படுசுரங்களும்
அமையும்வேடுவரனந்தகோடிய
ரணைந்துமேருவரையன்னதோர்
சமையமண்டபநிறைந்திருந்தநிரி
சங்குமைந்தனைவணங்கியே
எமையழைத்தபணிவிடையுரைத்தருள்க
வென்றுமண்மிசையிறைஞ்சினர்.

16. சிங்கமானைபுலிபன்றிமான்மரை
நிரண்டணைந்துநிருநாடெலாம்
எங்கணும்பரவிவந்துதண்பயிரி
யாவையுங்கெடவழித்தலால்
அங்கவற்றைவதைசெய்வதற்குமை
யழைத்தனங்கடிதுசென்மெனு
உங்களுக்குதவியாகயாம்வருத
லுண்டெனப்பலவுணர்த்தினன்.

17. முன்னடக்கவெனவாடையாபரண
முற்றும்வேடுவர்தமக்களித்
தன்னவர்க்குவிடைநல்கிமண்டப
மகன்றுபோனபினமைச்சரைச்
சென்னெறிப்படவிரைந்துநீர்நமது
சேனையோடினிதுசென்மெனாத்
தன்னகத்திடைபுகுந்துகற்புடைய
தையல்வைகுமிடமெய்தினான்.

18. கரியகாமுகம்விரித்துடுத்துவரி
கவசமிட்டுமணிமுடிதரித்
தரியவெற்றியுடைவாளயிற்சுரிகை
யரையழுத்திவயிரவிதரும்
பெரியபொற்சிலையெடுத்துவாளிபல
பெய்ததூணி*புறமெய்தவே
தெரிவையர்க்கரசியுடன்வரக்கடிது
சென்றுதேரின்மிசையேறினான்

19. நோளெழுந்தவெனவந்தெழுந்தன
குடைத்திரட்கடையுகத்திலந்
நாளெழுந்தகடல்போலவெங்கணா
நடந்தமன்னவர்பெரும்படை
வாளெழுந்தசுடரெண்டிசாமுக
மறைத்தமாமுகினெருக்கியே
தூளெழுந்தனகயங்கள்சென்றன
துரங்கமுந்துறநடந்தவே.

20. கோடகந்தருவிலாழியுங்கரட
குஞ்சரந்தருவிலாழியும்
ஆடகக்கவரியுஞ்செறிந்துபகி
ரண்டகோளமுமறைத்திட

---

* முதுகெய்தவே எனவும் பாடம்.

மாடவீதிகள்கடந்துசெம்பொன்மதில்
வாயில்விட்டகலநண்ணியே
வேடர்சேனையொடுகூடினைமுத
வேலைமைக்கடலில்வீழ்தல்போல்.

21. சிலையெடுத்தபுயமன்னனைத்தொழுது
சென்றுவேடுவர்பரந்துநீள்
அலையெடுத்தமலர்வாவியும்வயலு
மக்ஷியும்பொழிலடங்கலும்
மலையெடுத்தருகுதிரைவளைத்துமணி
வாரொழிக்கியிடைகூவெனக்
கலையுழைத்திரள்கள்கடமைடன்றிபுலி
கரடிகோளரிகலந்தவே.

22. ஏனமெண்குபுலியாளிசிங்கமத
யானைசம்புழைபுல்வாய்மரை
நானமோரிகடமாவழுங்கிரலை
நாவியூகமெலியாகணில்
கானமேதிவரையாடும்புமுயல்
கால்விசைத்திடைகலந்தன
வானகத்திடைபறந்தெழுந்தபல
வன்சிறைப்பறவைவர்க்கமே.

23. வட்டமாகவரிவிற்குனித்துவய
மன்னர்விட்டபலவன்சரம்
பட்டமாவினம்விழுந்துழன்றுடல்
பதைத்திறந்தனவனந்தமால்
தொட்டவேல்குணிலெறிந்துவேடுவர்
துணித்தமாவினமனந்தமால்
விட்டஞாளிகள்கடித்திழுத்திட
விழுந்தமாவினமனந்தமால்.

24. தண்டலைப்படுவிலங்கினிற்படு
சாங்கஞந்துணிசிரங்கஞம்
திண்டிறற்குமரர்மண்டலத்தலைவர்
செங்கையிற்செறிவிலுண்டையும்
விண்டலத்திலுயர்வன்சிறைப்பறவை
மீதுபட்டுயிரிழந்துபோய்
மண்டலத்திலிடமின்றியெத்திசையும்
வந்துவீழ்வனவனந்தமே.

25. வேல்கள்பட்டவொருகோடிகோடிவிறல்
வில்லுமிழ்ந்தசுடுபல்கொடுங்
கோல்கள்பட்டவொருகோடிகோடியெறி
குணில்கள்பட்டவொருகோடிதேர்க்
கால்கள்பட்டவொருகோடிகோடியெரி
கவணுமிழ்ந்தபலகற்கள்பட்
டோலமிட்டவொருகோடிகோடிசிலை
யுண்டைபட்டவொருகோடியே.

26. துடைகளற்றனசிரங்கள்பற்பல
துணிந்துவீழ்ந்தகைதுமிந்தன
இடைகளற்றகுடரோடியற்றன
வெழுந்துதாவுமடியற்றன
நடைகளற்றனநிணந்தெறித்தன
நரம்புமூளைகள்கழன்றன
கடையுகத்திலெழுகடலெனக்குருதி
ககனமீதுறவெழுந்ததே.

27. அலினுடற்களிறுநனிமடிந்துபிடி
யகல்வதற்கும்வழியற்றன
புலியுடன்காடியுழைமடிந்துகலை
போவதற்கும்வகையற்றன

மலியெழுங்கணிலிறந்திறந்துழுய
லேகுதற்குமிடமற்றன
வலியசிங்கமுடனாளியிற்றுமனை
வருவதற்குநெறியற்றவே.

28. பட்டபட்டவையெடுத்துவேடுவர்
பருத்தகட்டைகளடுக்கியே
சுட்டசுட்டதசைதின்றுதின்றுறு
சுணங்கினம்பலபிணங்கவே
மட்டறப்பருகியிட்டளித்திலர்
மடுக்களிற்புனலருந்தியே
இட்டமாலைபுனைமன்னர்மன்னவ
னிருந்தசூழலிடையெய்தினார்.

29. இவ்விடத்துளவிலங்கிறந்தவெறி
வேல்பிழைத்தும்வலைபீறியும்
வெவ்விடக்கணைகடப்பியுஞ்சில
விலங்குபோனவுளவாயினும்
அவ்விடத்தினடப்பதோவடவி
புகுவதோநகரியணைவதோ
எவ்விடத்தினிதுசேர்துமென்றவர்
விளம்பமன்னவனியம்புவான்.

30. சென்றசென்றதிசைதோறும்யாமினிது
சென்றுதிண்டிறல்விலங்கெலாம்
கொன்றுகொன்றவைமுடிந்தபின்வருத
லாகுமுன்னியகுறிப்பெனக்
கென்றுதேரின்மிசையேறியேயிறைவ
னேகலுங்கழலிறைஞ்சியே
நின்றவேடுவர்பெரும்படைத்திர
ளொருங்குகானிடைபரந்தவே.

31. அரியிளந்தகரிபிளிறுமோசையிவை
யறிதுமென்றணுகியடர்குவார்
கரிகவர்ந்ததிரள்விளவினன்கனி
கழன்றவென்றவணெருங்குவார்
வரிநெடும்புலிபிடித்திடக்கதறு
மானெனச்சிலைவணக்குவார்
பருமணற்கிழியவுழுதவோதையிவை
பன்றியென்றவிடைதுன்னுவார்.

32. குருகலம்புமொலியிதுதடாகமிது
குஞ்சரங்கள்கரமொண்டுநீர்
பருகுகின்றவொலியிதுவெனக்கடிது
பற்றுவார்நெடிதுசுற்றுவார்
சருகலம்புமொலிசெவியுணர்ந்திரலை
தானெனக்கடிதுதாவுவார்
முருகலர்ந்தபொழிலலைவதாகமென
முந்துவார்பகழிசிந்துவார்.

33. மயின்முழக்கமிதுகிளிமுழக்கமிது
வாருமென்றுசிலரோடுவார்
குயின்முழக்கமிதுசிவன்முழக்கமிது
கூடவாருமெனநாடுவார்
வெயிலெறிந்ததுவிளங்குமாமணியின்
வேகநாகமெனநீடுவார்
துயிலுணர்ந்தநெடுமைாகலித்ததிது
தொடர்வமென்றுபலர்கூடுவார்.

34. குன்றுகுன்றுதொறுநீலமேவிய
குளந்தொறுங்குளிர்வனந்தொறும்
சென்றுசென்றடிதொடர்ந்தடர்ந்துபல
திக்கினுஞ்செறிவிலங்கெலாம்

கொன்றுகொன்றுகுவைசெய்தெரித்திடு
கொடுங்கனற்படுகொழுந்தசை
தின்றுதின்றுபுனலுண்டுவென்றிபுனை
திண்*பெரும்படைநடந்ததே.

35. இரவினிற்பொரிந்திருண்டுசூன்மழை
யிரண்டுதுன்றியுலகெங்கணும்
பரவியெய்தகணையெதிர்வரும்படி
படர்ந்தமுண்டகவிறும்பினுற்
றரவினங்கரடிபுலிகள்பன்றிக
ளழுங்குடும்பெலிமடங்கன்மான்
கரவிலுற்றிதனுளுறையுமென்றெயினர்
காடெலாமெரிபரப்பினார்.

36. சண்டவெந்தழல்பசித்தழன்றுலகு
தன்னையுண்ணவெழுதன்மைபோல்
கண்டமொன்பதுமெரிந்திடத்தெறு
கடுங்கொழும்பொறிகள்சிந்தின
கொண்டலிற்புகைபரந்துசுற்றின
கொழுஞ்சுடர்ப்படுகொழுந்துபோய்
அண்டமுற்றனபரந்ததந்தர
மதற்குமப்புறமெழுந்ததே.

37. சுட்டசெந்தழலில்வெந்துவெந்துடல்
சுருண்டபற்பலவிலங்கினம்
கட்டுபாசமதுவிட்டஞானிகள்
கடித்திடச்சிலகழிந்தன
கெட்டழிந்துநிலையற்றுமீமிசை
கிளர்ந்தெழுந்துகுதிகொண்டுபோய்
விட்டமாமுனியிருந்தசூழலில்
வெருண்டுசிற்சிலவிழுந்தவே.

---

* செருப்படை என்றும் பாடம்.

## வேட்டஞ்செய் காண்டம்.

38. மட்டிலாதனவிடுத்தனம்மவன்
வதைத்தனன்கொலிவனத்திலே
பட்டிலாதனவெருண்டுவந்தன
வெனச்சினம்பதைபதைத்திட
விட்டிலாவினைவிளைப்பல்யாமென
வெகுண்டுவிட்டவெகுவெவ்விலங்
கெட்டிலொன்றுவரல்கண்டிலேமென
விருந்தமாமுனிபிரங்கினான்.

### வேறு

39. கலங்கலென்றணிகரத்தினாற்கௌசிகனமைத்து
விலங்கினங்களைநோக்கிநீர்வினைவிளைத்ததுவும்
அலங்கன்மன்னவன்வதைத்ததுமாருயிர்வருந்த
நலங்கிவந்ததுநவிலுமென்றுரைத்திடநவிலும்.

40. கானடுங்கிடக்கண்புனல்சொரிந்திடக்கழுத்தின்
மேனடுங்கிடமெய்யெலாநடுங்கிடவீசும்
வானடுங்கிடமறலியைக்கண்டமன்னுயிரே
போனடுங்கிமாமுனிவனைப்போற்றியேபுகலும்.

41. சென்றனஞ்செழும்பயிர்களுமுயிர்களுஞ்சிதைத்து
நின்றனம்மெமைநெடுமுடிமன்னவனோர்ந்து
கொன்றனன்பிழைத்தெய்தினஞ்சிலசிலகுறையும்
என்றவாவிரிந்தெய்தியவிலங்குகளெல்லாம்.

42. என்றுகூறிடக்கௌசிகனெரியெழவிழித்து
நன்றுநன்றெனநகைத்துக்கைநாசியிற்சேர்த்தி
வென்றிவேந்தனைவெல்வதுகருதியோர்வீரப்
பன்றிதன்றவப்பெருமையாலிமைப்பினிற்படைத்தான்.

43. பொன்னிறத்துமெய்வெண்ணிறத்துகிர்புட்பராகம்
நன்னிறக்கண்டநாலுகாலுஞ்செழும்பவளம்
செந்நிறத்தகண்செம்மணிசெழுமுகம்பச்சை
அன்னிறக்குரநீலம்வச்சிரத்தெயிறதற்கே.

44. வயிற்றினுற்பெருமண்புவிமறைபடமறைக்கும்
எயிற்றினலுயர்விண்புவியேழையுமெடுக்கும்
கயிற்றினலுயிர்கவர்ந்திடுகாலனைக்கலக்கும்
பயிற்றினற்பினையென்செயாதப்பெரும்பன்றி.

45. அப்பெருங்கொடும்பன்றியையருந்தவனேக்கி
எப்பெரும்படைத்தலைவருமெயினருமிறக்கத்
தப்பறக்கொலைசெய்தரிச்சந்திரன்றன்னை
இப்பெரும்பொழில்கொணர்ந்துநீபோவெனவிசைத்தான்.

46. என்றுகூறிடவிருடியையவணங்கிநெட்டெயிற்றல்
குன்றுநீறெழவெற்றிநீள்குவடெலாங்குறைத்து
நின்றுநின்றுசெங்கண்களானெருப்புகவிழித்துச்
சென்றுசாடிற்றுமன்னவன்சேனையைச்சிதற.

47. தலைகளற்றிடத்தடங்கரமற்றிடவீரர்
குலைகளற்றிடக்குஞ்சரமற்றிடக்கொலைஞர்
சிலைகளற்றிடச்செஞ்சாமற்றிடத்திரைகள்
வலைகளற்றிடவெற்றிற்றுமாயவராகம்.

48. பீனுமீாலும்பித்துநீள்குடர்களும்பிளக்கத்
தாளுநெஞ்சமுமற்றிடமுடிவலைச்சாடி
ஆளுமற்றிருதோளுமற்றங்கையிற்பிடித்த
வாளுமற்றிடவெற்றிற்றுமாயவராகம்.

49. கரிபடப்படச்சேனைகள்படப்படக்கலினப்
பரிபடப்படப்பரிகலம்படப்படப்பசுங்கண்
ணெரிபடப்படவிரதங்கள்படப்படவிடைதாள்
அரிபடப்படச்சுணங்குகள்பட்டனவனந்தம்.

50. கைதவம்மிதுவென்றறக்கடற்படைகலங்கி
மைதவழ்ந்ததிண்குன்றினுமரத்தினுமறைந்து
பெய்தவேல்களுங்குணில்களும்பிறைமுகமழுவும்
எய்தவாளியும்பொடிபடவிதிர்த்ததவ்வேனம.

51. குடர்பிளந்தனகுறங்குகள்பிளந்தனகொடுங்கை
மடல்பிளந்தனவாய்பிளந்தனவிருவகிராய்
உடல்பிளந்தனவுரம்பிளந்தனசிரமுருண்ட
கடல்கிளர்ந்தெனக்குருதிநீர்வனமெலாங்கலந்த.

52. சிரமிதந்தனதிரள்பிணமிதந்தனநெறித்த
கரமிதந்தனகழன்றனகால்களுங்கண்ணும்
குரமிதந்தனகுதிரைகண்மிதந்தனகுளிர்மேல்
சரமிதந்தனகுருதியந்தடங்கடறனிலே.

53. தோளைவீழ்த்ததுதுடைகளைவீழ்த்ததுதோள்சேர்
தாளைவீழ்த்ததுதடக்கையைவீழ்த்ததுபிர்போல்
மூளைவீழ்த்ததுதாழையின்மாருதமோதப்
பாளைவீழ்ந்தெனவீழ்ந்தனவேடர்தம்பற்கள்.

54. கொலையெடுத்தவேலையினர்தங்குருதிநீர்பெருகி
மலையெடுத்துநீண்மரங்களைமுறித்தெடுத்தோடிச்
சிலையெடுத்துவீழ்திரைகளும்வலைகளும்வாரி
அலையெடுத்தநீர்வாரியையணைந்ததையன்றே.

55. சென்றசென்றவத்திசையெலாம்பிணக்குவைசெறியக்
கொன்றுவீழ்த்திடக்குலைந்ததக்கொடும்படைக்கூட்டம்
நின்றதிக்கினைநாடியேநிருபன்முன்னொருவன்
பன்றியோடியவிசையினைப்பலமுறைபகர்ந்தான்.

56. அந்தவாசகங்கேட்டரிச்சந்திரன்முனிந்தே
எந்தவாறுவந்தெய்தியதிவர்களைவதைத்த
தந்தவாறெதுகூறெனவாசனைவணங்கி
எந்தைகேளெனவேடுவன்வகைவகையிசைத்தான்.

57. வானமேழுமண்ணேழுமுன்மருப்பினுலெடுத்த
ஏனமோபுரமெரித்தவனுலகெலாமெரிக்குந்
தானமோவுயிர்துரிசறச்சமனெடும்பன்றி
யானதோவதுசிறிதும்யாமுணர்ந்திலமையா.

58. தலைநிறம்பச்சைதன்னிறம்பொன்னிறந்தறுகண்
ணிலைநிறஞ்செழுமாமணிகுரமிந்த்ரநீலம்
மலையினும்பெரிதானதோர்வராகம்வந்தெய்திக்
கொலைபுரிந்தறுகூன்பெருங்கோட்டினாலென்றான்.

59. சேனையும்பெருந்தேர்களுந்திண்பரித்திரளும்
யானையுங்கொடுமுடுவலுமிறந்திடவெற்றிக்
கானெலாம்பிணக்காடுசெய்தெய்திற்றுக்கண்டாய்
தேனலங்கலாய்தேரினைத்திரித்தருளென்றான்.

வேறு.

60. என்றுபகர்ந்திடமன்னவர்மன்னனெழுந்தகதத்துடனே
நன்றிதுநன்றெனவங்கையொடங்கையறைந்துநகைத்துடனே
இன்றுமடிந்தவரின்னுயிர்தம்மிலுமெம்முயிரோவலிதென்
றன்றுசவுந்தரிதந்தநெடுஞ்சிலையங்கையெடுத்தனனே.

61. பாகரின்மிக்கவனன்மறைமுற்றெதிர்பாகுகுறித்தவனும்
சாகாமுற்றெழுபானுகுலத்திறைதாளிணையைத்தொழுதே
நாகரிகச்சுடராடரவப்பணிநாயகிபொற்சடிலச்
சேகரிபத்திரகாளிகொடுத்தருடேரைநடத்தினனே.

62. படியுமிடிந்ததுபொடியுமெழுந்ததுபலபலபைம்பொழிலும்
மடியவிழுந்தனககனமடர்ந்துயர்வரையுநெரிந்தனவான்
முடியுமதிர்ந்ததுகதிருமறைந்ததுமுகிலுமுழன்றதுநீ
ரிடியுமுதிர்ந்ததுகொடிமலையுஞ்சுடரிரதநடந்திடவே.

63. மாறுபடச்சிலதேரெனவுற்றெழுமால்வரையத்தனையும்
நீறுபடப்படநாடிமணிச்சுடர்நேமிநெரித்தனவால்
ஆறுபடப்படவூறுபுனற்றிரையாழியையொத்திடவே
வீறுபடுத்துயர்கானமனைத்தையும்வேரொடெடுத்தனவே.

64. தங்கமுடித்தனிவெண்கவிகைத்திரிசங்குமகற்கெதிரே
திங்களெனத்தவளந்திகழ்முத்தொளிசிந்துமருப்பதனல்
வெங்கண்மதக்களிறும்பலவிற்செருவென்றபரித்திரளும்
பங்கமுறப்பலபஞ்சுபடுத்தியபன்றியெதிர்த்ததுவே.

65. வேயின்மிகுத்தெழுமால்வரையெட்டினுமீதுவிசைப்படுறவே
பாயுமுகிற்குலமோறையுமம்பொடுபாரில்விழச்சிதறும்
வாயினுமாத்திசைநாலுமிறைந்துயர்வானுமிறைக்குரும்விபுரிக்
தீயின்மணித்திரைநீர்வடவைக்கனல்சோரவெரித்திடுமே.

66. ஆடன்மதத்திருநாலுதிசைக்களிறனையத்தனையும்
கோடதனிற்கரமீதுறவைத்துடல்கூசிவெருக்கொளவே
சேடன்முதற்படிவாளரவத்தலைசேரநடுக்குறவே
ஓடும்விசைத்தெழுநீள்புவியைப்புனலூறநெரிந்துழுமே.

67. ஊறுபடுத்திடுபாகர்செலுத்தியவோடைமதக்கரியை
நீறுபடுத்திடும்வீரர்நடத்தியநீளிரதத்தினையே
கூறுபடுத்திடும்வாதுவரெற்றியகோலவயப்பரியைச்
சேறுபடுத்திடுமாமகரத்திரள்சேருமளக்கரையே.

68. அனர்த்தம்விளைக்கவிடுத்ததவத்தனளித்தவுரைப்படியே
சினத்துவெறித்துமதக்கரிகற்கிதிடுக்கிடவுற்றணுகி
இனத்துரகத்தருணக்கனகத்திரதத்தினையெற்றுகெளு
மனத்தினினைத்துவலத்தபுறத்தின்மருப்பையொடுக்கியதே.

69. உதித்ததுணைப்பிறையொத்தமருப்பையொடுக்கவுணர்ச்சியொ
[ருக்
கதித்தபெருத்தசிலைக்குளடுத்தொர்கனற்கணைதொட்டுவிட
எதிர்த்தகிருட்டிணனெற்றியின்முற்றியெடுத்தகலக்கொடுபோய்
விதிர்த்துடலுட்கிவெருக்கொளமற்றொருவெற்பிடையுய்த்தது
[வே.

70. உய்த்ததுநீளிடைபத்துளயோசனையுற்றெழுமால்வரைமேல்
வைத்தலும்வாய்வழிகக்கியசோரியில்வட்டணையாவுழலா
மெய்த்தவன்வாழ்பொழிலுட்புகவோடலும்விட்டபதாதியெ
[லாம்
மொய்த்தனகாவலனைப்புடைசூழ்தரமுற்கிளர்வாரிதிபோல்.

71. கடற்படைசூற்றியிளைத்திறைபத்மகழற்றுணையைத்தொழலும்
தடக்கையமைத்துமனத்திலலைத்தறவிர்ந்திரதத்தினைமுன்
நடத்தியெதிர்த்தகிருட்டிவதைக்கநடுத்தனுவைத்துநிணக்
குடற்கடெறித்துவிறற்படைபட்டகொலைக்களமுற்றனனே.

72. புரவலனப்படைகரிபரிபட்டதொர்புதுமைகளைத்தெரிசித்
தரகரவிப்படிவிளைவதெனக்குனதருளினெறிச்செயலென்
றிருகரம்வைத்திருசெவியைமறைத்தெழின்முடியையசைத்
துரகநடத்திடவிரைவினிழுத்தனசுடரிரதத்தினையே. [தெதிரே

73. ஏனம்விழுந்தயர்மால்வரைகண்டதினேறியிழிந்தகலப்
போனதுணர்ந்தடிமீதுதொடர்ந்துபுகாதவனங்கள்புகுந்
தானனமுந்திருமேனியுநுண்பொடியாடமடந்தையுடன்
மானவன்வந்தொருவாசநெடும்புனல்வாவியணைந்தனனே.

74. கானின்மிசைந்தெழுதாமரையிற்படர்காவிகளிற்படரும்
தேனின்முழக்கொலிநாலுதிசாதிசைசேரவியப்புறுமால்
மீனின்முழக்கொலியூழியினிற்கடைவேலையையொப்பதுநீள்
வானின்முழக்கொலிபோல்வனசக்கரவாகமிரைப்பதுவே.

75. தமரநெடுந்திரையெரிகுரையும்பலசகுனமுழங்கிரையும்
அமரமடந்தையர்குடையொலியும்பலவருவிவிழுங்கலியும்
திமிரமதக்கயநிறைவுறமொண்டறல்சிதறதிர்வுங்குரவம்
கமழ்தருமவ்வனமுனிவர்கமண்டலுகளகளெனுந்தொ ..ரியும்.

76. முறுகுகுடைந்தளிமுரலமிகுந்தொனிமுதலைகடந்தமின்வந்
தருகுசெறுந்தொனிகுடநிகர்வெள்வளையகடுளையுந்தொனி
[வெண்
குருகிரியுந்தொனிசிரல்கள்விழுந்தொனிகொடுவரிவந்துபுனல்
பருகுமிகுந்தொனிபறவைகளின்றொனிபகலிரவுந்தணியா.

77. அறத்தவர்வநக்கலையிற்றுவர்நித்தமலர்ப்பொழில்பொற்பிரசம்
மறத்தகளிற்றின்மதத்தினொழுக்குமடக்கவரிப்பொழிபால்
நிறத்திடுபச்சைமணித்துகிர்வச்சிரநித்திலமுட்களுல
கறுத்தவெளுத்தசிவத்தபசுத்தகணிப்பதெவர்க்கெளிதே.

## வேறு.

78. முளரிசெங்குமுதநீலமுண்டகங்குவளைவெள்ளை
கிளர்நறுமலர்களெல்லாங்கிளையொடுமலியப்பூத்த
அளவிலாமதியுமீனுமருக்கருமலியவண்டம்
வளர்புவிதனிலும்வேதாவகுத்தனபோன்றவன்றே.

79. மண்கொளாததனுணீரும்வளைகளுமலருமீனும்
விண்கொளாததனுள்வைகும்வெண்குருகன்னநாரை
பண்கொள்வாய்வண்டுவைகும்பதுமத்தின்பரப்புநோக்கின்
கண்கொளாமனமுங்கொள்ளாகாவியுமன்னதேயால்.

80. மீதெலாந்தரங்கமஃதின்மேலெலாங்கமலப்போது
போதெலாஞ்சங்கஞ்சங்கின்புடையெலாம்பொருந்துதாது
தாதெலாம்வண்டுவண்டின்றுளெலாஞ்செழுந்தேன்மற்றும்
ஈதலாவில்லையந்தவிருப்புனற்றடத்திலம்மா.

81. வரையடுத்தரியசோதிமணிகொழித்தருவிபாய்ந்த
விரைமலர்ப்பொழிலினீழல்வெண்டிரைமேன்மேன்மோதி
நிரைநிரைத்தரளமுந்திநெடுநிலாவிரிந்தவண்டற்
கரையினைமன்னன்சார்ந்தான்கடலினையருக்கன்சார்ந்தான்.

82. யானையுந்தேருமாவுமிழிந்தொருங்கியாருமீண்டித்
தேனையொத்தினியவாவிச்செழும்புனல்குடைந்துண்டாறிக்
கானையுற்றிலங்குதண்பூங்கடிபொழிலிடங்கடோறுஞ்
சேனையுமன்னர்தாமுஞ்செல்வனுமினிதிருந்தார்.

83. தாபமும்புனலுங்கொள்வார்தாபதர்வந்துமாதர்
தீபமுமயோத்திவேந்துஞ்சேனையுமிருக்கக்கண்டு
கோபமுற்றழன்றுமன்னுகோசிகன்கண்டாலுன்னைச்
சாபமிட்டெரிப்பனீண்டுசார்ந்ததுதகாதேயென்றார்.

84. யாமவற்கடிமையன்றோவெம்வயிற்சீற்றமென்னே
யாமவற்கிழைத்ததீங்குண்டெனினுந்திருத்திப்பின்னைப்
போமதேகருமமென்னுப்புரவலன்புகலக்கேட்டண்
டாமதேகாண்டியென்னுவருந்தவரகன்றுபோனார்.

85. மாதவரகன்றபின்னர்மாலையம்படாத்துணிங்கிப்
பூதலமென்னுமங்கைப்புதையிருட்படாத்துட்புக்காள்
மேதகுதவத்தின்மிக்கோன்வினைப்படாம்புகுதுமுன்னம்
தீதறுகுணத்தின்மிக்கோன்சித்திரப்படாத்துட்புக்கான்.

86. பூவலயத்தைமூடும்புதையிருளறச்செஞ்சூட்டுச்
சேவலார்ப்பெடுப்பக்கீழ்பால்செங்கதிர்வந்துதோன்ற
யாவருமுணர்ந்தெழுந்தாரிளங்கொடியுடன்றுயின்ற
காவலன்றானுமற்றோர்கனவுகண்டுணர்ந்தெழுந்தான்.

87. மன்னவன்றுணுக்கங்கண்டுவல்லியும்பல்காறேக்கி
என்னைநின்மனத்திலெண்ணமியம்புகென்றிறைஞ்சலோடும்
கன்னன்மென்மொழியாயானோர்கனவுகண்டுணர்ந்தேனென்ன
பின்னரக்கனவினீர்மைபேசெனப்பேசலுற்றான்.

88. அமைச்சரைத்தூதரோடியழைக்கவென்றரசன்கூற
இமைப்பினிற்சென்றழைத்தாரியாவரும்விரைவின்வந்தார்
சமைத்ததீவினையைவென்றான்றமைச்சரணம்போற்றி
எமைக்கடிதழைத்தவாறென்னிறைவனியருள்கவென்றார்.

# ஆசாரக்கோவை.

1. நன்றி யறிதல் பொறையுடைமை யின்சொல்லோ
டின்னாத வெவ்வுயிர்க்குஞ் செய்யாமை கல்வியோ
டொப்புர வாற்ற வறித லறிவுடைமை
நல்லினத் தாரோடு நட்ட லிவையெட்டுஞ்
சொல்லிய வாசார வித்து.

2. பிறப்பு நெடுவாழ்க்கை செல்வம் வனப்பு
நிலக்கிழமை மீக்கூற்றங் கல்விநோ யின்மை
யிலக்கணத்தா லிவ்வெட்டு மெய்துப வென்று
மொழுக்கம் பிழையா தவர்.

3. தக்கணை வேள்வி தவங்கல்வி யிந்நான்கு
முப்பா லொழுக்கினாற் காத்துய்க்க வுய்க்காக்கா
லெப்பாலு மாகா கெடும்.

4. வைகறை யாமங் துயிலெழுந்து தான்செய்யு
நல்லறமு மொண்பொருளுஞ் சிந்தித்து வாய்வதிற்
றந்தையுந் தாயுந் தொழுதெழுக வென்பதே
முந்தையோர் கண்ட முறை.

5. உடுத்தலா னீராடா ரொன்றுடுத் துண்ணா
ருடுத்தாடை நீருட் பிழியார் விழுத்தக்கா
ரொன்றுடுத் தென்று மவைபுகா ரென்பதே
முந்தையோர் கண்ட முறை.

6. தலையுரைத்த வெண்ணெயா லெவ்வுறுப்புந் தீண்டார்
பிறருடுத்த மாசுணியுந் தீண்டார் செருப்புக்
குறையெனினுங் கொள்ளா ரிரந்து.

7. நீரு ணிழற்புரிந்து நோக்கார் நிலமிராக்
கீரு ரிராமரமுஞ் சேரா ரிடரெனினு
நீர்தொடா தெண்ணெ யுரையா ருரைத்தபி
னீர்தொடார் நோக்கார் புலை.

8. நீராடும் போழ்தி னெறிப்பட்டா ரெஞ்ஞான்று
நீந்தா ருமியார் திளையார் விளையாடார்
காய்ந்த தெனினுந் தலையொழிந் தாடாரே
யாய்ந்த வறிவி னவர்.

9. அரச னுவாத்தியான் றாய்தந்தை தம்மு
னிகரில் குரவ ரிவரிவரைத்
தேவரைப் போலத் தொழுதெழுக வென்பதே
யாவருங் கண்ட நெறி.

10. குரவ ருரையிகந்து செய்யார் விரதங்
குறையுடையார் தீர மறவார் நிறையுவா
மேற்கோலுந் தின்னா மரங்குறையா ரென்பதே
நல்லறி வாளர் துணிவு.

11. காலினீர் நீங்காமை யுண்டிடுக பள்ளியு
மீரம் புலராமை யேறற்க வென்பதே
பேரறி வாளர் துணிவு.

12. உண்ணுங்கா லோக்குந் திசைகிழக்குக் கண்ணமர்ந்து
தூங்கான் றுளங்காமை நன்கிரீஇ யாண்டும்
பிறிதியாது நோக்கா னுரையான் றொழுதுகொண்
டுண்க வுகாஅமை நன்கு.

13. விருந்தினர் மூத்தோர் பசுசிறை பிள்ளை
யிவர்க்கூண் கொடுத்தல்லா லுண்ணாரே யென்று
மொழுக்கம் பிழையா தவர்.

14. முன்றுவ்வார் முன்னெழார் மிக்குறா ரூணின்க
ணென்பெறினு மாற்ற வலமிரார் தம்மிற்
பெரியார்தம் பாலிருந்தக் கால்.

15. இருகையாற் றண்ணீர் பருகா ரொருகையாற்
கொள்ளார் கொடாஅர் குரவர்க் கிருகை
சொறியா ருடம்பு மடுத்து.

16. அந்திப் பொழுது கிடவார் நடவாரே
யுண்ணார் வெகுளார் விளக்கிகழார் முன்னந்தி
யல்குண் டடங்கல் வழி.

17. கிடக்குங்காற் கைகூப்பித் தெய்வந் தொழுது
வடக்கொடு கோணந் தலைசெய்யார் மீக்கோ
ளுடற்கொடுத்துச் சேர்தல் வழி.

18. சுடரிடைப் போகார் சுவர்மே லுமியா
ரிடரெனினு மாசுணி கீழ்தம்மேற் கொள்ளார்
படைவரினு மாடை வளியுறைப்பப் போகார்
பலரிடை யாடை யுதிராரே யென்றுங்
கடனறி காட்சி யவர்.

19. பொய்குறளை வெளவ லழுக்கா றிவைநான்கு
மையந்தீர் காட்சியார் சிந்தியார் சிந்திப்பி
னையம் புகுவித் தருநிரயத் துய்த்திடுந்
தெய்வமுஞ் செற்று விடும்.

20. நாழி மணைமே லிரியார் மணைகவிழார்
கோடி கடையுள் விரியார் கடைத்தலை
யோராது கட்டிற் படாஅ ரறியாதார்
தந்தலைக்க ணில்லா விடல்.

21. காட்டுக் களைந்து கலங்கழீஇ யில்லத்தை
யாப்பிநீ ரெங்குந் தெளித்துச் சிறுகாலை
நீர்ச்சால் கரக நிறைய மலரணிந்
தில்லம் பொலிய வடுப்பினுட் டீப்பெய்க
நல்ல துறல்வேண்டு வார்.

22. படிறும் பயனிலவும் பட்டி யுரையும்
வசையும் புறனு முரையாரே யென்று
மசையாத வுள்ளத் தவர்.

23. முளிபுல்லுங் கானமுஞ் சேரார்தீக் கூட்டார்
துளிவிழக் கால்பரப்பி யோடார் தெளிவிலாக்
கானந் தமிய ரியங்கார் துளியஃகி
நல்குர வாற்றப் பெருகினுஞ் செய்யாரே
தொல்வரைவிற் றீர்ந்த தொழில்.

24. எழுச்சிக்கட் பிற்கூவார் தும்மார் வழுக்கியு
மெங்குற்றுச் சேறிரோ வென்னாரே முன்புக்
கெதிர்முகமா நின்று முரையா ரிருசார்வுங்
கொள்வர் குரவர் வலம்.

25. கால்வாய்த் தொழுவு சமய மெழுந்திருப்
பாசார மென்ப குரவர்க் கிவையிவை
சாரத்தாற் சொல்லிய மூன்று.

26. பார்ப்பார் தவரே சுமந்தார் பிணிப்பட்டார்
மூத்தா ரிளையார் பசுப்பெண்டி ரென்றிவர்கட்
காற்ற வழிவிலங்கி னாரே பிறப்பிடைப்
போற்றி யெனப்படு வார்.

27. நகையொடு கொட்டாவி காறிப்புத் தும்ம
லிவையும் பெரியார்முற் செய்யாரே செய்யி
னசையாது நிற்கும் பழி.

28. நின்றக்கா னிற்க வடக்கத்தா லென்று
மிருந்தக்கா லேவாமை யேகார்—பெருந்தக்கார்
சொல்லிற் செவிகொடுத்துக் கேட்டீக மீட்டும்
வினவற்க சொல்லொழிந்தக் கால்.

29. விரைந்துரையார் மேன்மே லுரையார்பொய் யாய
பரந்துரையார் பாரித்துரையா—ரொருங்கெனைத்துஞ்
சில்லெழுத்தி னாலே பொருளடங்கக் காலத்தாற்
சொல்லுக செவ்வி யறிந்து.

30. துன்பத்துட் டுன்புற்று வாழ்தலு மின்பத்து
ளின்ப வகையா னொழுகலு—மன்பிற்
செறப்பட்டா ரில்லம் புகாமையு மூன்றுந்
திறப்பட்டார் கண்ணே யுள.

31. அளையுறை பாம்பு மரசு நெருப்பு
முழையுறை சீயமு மென்றிவை நான்கு
மிளைய வெளிய பயின்றனவென் றெண்ணி
யிகழி னிழுக்கந் தரும்.

32. அறத்தொடு கல்வியாண் மாள்வினை கூரை
இறப்பப் பெருகியக் கண்ணும் திறப்பட்டார்
மன்னரின் மேம்பட்ட செய்யற்க செய்பவேன்
மன்னிய செல்வங் கெடும்.

33. தலைக்கிட்ட பூமேவார் மோந்தபூச் சூடார்
பசுக்கொடுப்பிற் பார்ப்பார்கைக் கொள்ளாரே யென்றும்
புலைக்கெச்சி னீட்டார் விடல்.

34. கைசுட்டிக் கட்டுரையார் கான்மே லெழுத்திடார்
மெய்சுட்டி யில்லாரை யுள்ளாரோ டொப்புரையார்
கையிற் குரவர் கொடுப்ப விருந்தேலா
ராயமில் காட்சி யவர்.

35. தன்னுடம்பு தார மடைக்கலந்தான் றன்னுயிர்க்கென்
றெண்ணித் துவைத்த பொருளோ டிவைநான்கும்
பொன்னினைப் போற்போற்றிக் காத்துய்க்க வுய்க்காக்கான்
மன்னிய வேதந் தரும்.

36. நந்தெறும்பு தூங்கணம் புட்காக்கை யென்றிவைபோற்
றங்கரும நல்ல கடைப்பிடித்துத் தங்கரும
மப்பெற்றி யாக முயல்பவர்க் காசார
மெப்பெற்றி யானும் படும்.

37. சூதர் கழக மரவ மறுக்களம்
பேதைக ளல்லார் புகாஅர் புகுபவே
லேதம் பலவுந் தரும்.

38. அறியாத தேயத்தா னாதுலன் மூத்தா
னிளையா னுயிரிழந்தா னஞ்சினா னுண்பா
னரசர் தொழிறலை வைத்தான் மணாளனென்
றென்பதின்மர் கண்டீ ருரைக்குங்கா னெய்யான
வாசாரம் வீடுபெற் றார்.

# நான்மணிக்கடிகை.

1. கள்ளி வயிற்றி னகில்பிறக்கும் மான்வயிற்றின்
ஒள்ளரி தாரம் பிறக்கும் பெருங்கடலுள்
பல்விலைய முத்தம் பிறக்கு மறிவார்யார்
நல்லாள் பிறக்குங் குடி.

2. கற்றார்முற் றோன்றா கழிவிரக்கங் காதலித்தொன்
றுற்றார்முற் றோன்று முறுமுதல்—தெற்றென
அல்ல புரிந்தார்க் கறந்தோன்றா வெல்லாம்
வெகுண்டார்முற் றோன்றாக் கெடும்.

3. கன்றாமை வேண்டுங் கடிய பிறர்செய்த
நன்றியை நன்றாக் கொளல்வேண்டும்—என்றும்
விடல்வேண்டுந் தன்கண் வெகுளி யடல்வேண்டும்
ஆக்கஞ் சிதைக்கும் வினை.

4. பறைநன்று பண்ணமையா யாழி னிறைநின்ற
பெண்ணன்று பீடிலா மாந்தரின்—பண்ணழிந்
தார்தலி னன்று பசித்தல் பசைந்தாரிற்
றீர்தலிற் றீப்புகுத னன்று.

5. இன்னாமை வேண்டி னிரவெழுக விந்நிலத்து
மன்னுதல் வேண்டி னிசைநடுக—தன்னோடு
செல்வது வேண்டி னறஞ்செய்க வெல்வது
வேண்டின் வெகுளி விடல்.

6 கோனோக்கி வாழுங் குடியெல்லாந் தாய்தருநற்
பானோக்கி வாழுங் குழவிகள்—வானத்
துளிநோக்கி வாழு முலக முலகின்
விளிநோக்கி யின்புறூஉங் கூற்று.

# நான்மணிக்கடிகை.

7. திருவிற் றிறலுடைய தில்லை யொருவற்குக்
கற்றலின் வாய்த்த பிறவில்லை—எற்றுள்ளும்
இன்மையி னின்னாத தில்லை யிலமென்னும்
வன்மையின் வன்பாட்ட தில்.

8. பிறக்குங்காற் பேரெனவும் பேரா விறக்குங்கால்
நில்லெனவு நில்லா வுயிரனைத்தும்—நல்லாள்
உடன்படிற் றானே பெருகுங் கெடும்பொழுதில்
கண்டனவுங் காணாக் கெடும்.

9. போரின்றி வாடும் பொருநர்சீர் கீழ்வீழ்ந்த
வேரின்றி வாடு மரமெல்லாம்—நீர்பாய்
மடையின்றி நீணெய்தல் வாடும் படையின்றி
மன்னர்சீர் வாடி விடும்.

0. நாற்ற முரைக்கு மலருண்மை கூறிய
மாற்ற முரைக்கும் வினைநலம் தூக்கின்
அகம்பொதிந்த தீமை மனமுரைக்கு முன்னம்
முகம்போல முன்னுரைப்ப தில்.

1. மழையின்றி மாநிலத்தார்க் கில்லை—மழையும்
தவமிலா ரில்வழி யில்லை—தவமும்
அரசிலா ரில்வழி யில்லை—யரசனும்
இல்வாழ்வா ரில்வழி யில்.

2. கண்ணிற் சிறந்த வுறுப்பில்லை கொண்டானின்
துன்னிய கேளிர் பிறரில்லை மக்களின்
ஒண்மைய வாய்ச்சான்ற பொருளில்லை யீன்றாளின்
என்ன கடவுளு மில்.

13. நல்லார்க்குந் தம்மூரென் றூரில்லை நன்னெறிச்
செல்வார்க்குந் தம்மூரென் றூரில்லை—அல்லாக்
கடைகட்குந் தம்மூரென் றூரில்லை தங்கைத்
துடையார்க்கு மெவ்வூரு மூர்.

14. கல்லா வொருவர்க்குத் தம்வாயிற் சொற்கூற்றம்
மெல்லிய வாழைக்குத் தானீன்ற காய்கூற்றம்
அல்லவை செய்வார்க் கறங்கூற்றங் கூற்றமே
இல்லிருந்து தீங்கொழுகு வாள்.

15. கள்ளாமை வேண்டுங் கடிய வருதலால்
தள்ளாமை வேண்டுந் தகுதி யுடையன
நள்ளாமை வேண்டுஞ் சிறியாரோ டியார்மாட்டும்
கொள்ளாமை வேண்டும் பகை.

16. இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம்
வளமிலாப் போழ்தத்து வள்ளன்மை குற்றம்
கிளைஞரில் போழ்திற் சினங்குற்றங் குற்றம்
தமரல்லா ரில்லகத் தூண்.

17. எல்லா விடத்துங் கொலைதீது மக்களைக்
கல்லா வளர விடறீது—நல்லார்
நலந்தீது நாணற்று நற்பிற் குலந்தீது
கொள்கை யழிந்தக் கடை.

18. மாசு படினு மணிதன்சீர் குன்றுவாம்
பூசிக் கொளினு மிரும்பின்கண்—மாசோடும்
பாசத்து ளிட்டு விளக்கினுங் கீழ்தன்னை
மாசுடைமை காட்டி விடும்.

# நான்மணிக்கடிகை.

19. எள்ளற்க வென்று மெளியரென் றென்பெறினும்
கொள்ளற்க கொள்ளார்கை மேல்வர—உள்சுடினும்
சீறற்க சிற்றிற் பிறந்தாரைக் கூறற்க
கூறல் லவற்றை விரைந்து.

20. வளப்பாத்தி யுள்வளரும் வண்மை கிளைக்குழாம்
இன்சொற் குழியி லினிதெழூஉம்—வன்சொற்
கரவெழூஉங் கண்ணில் குழியி லிரவெழூஉம்
இன்மைக் குழியில் விரைந்து.

21. கடற்குட்டம் போழ்வர் கலவர்—படைக்குட்டம்
பாய்மா வுடையா னுடைக்கிற்குந் தோமில்
தவக்குட்டந் தன்னுடையா னீந்து மவைக்குட்டம்
கற்றான் கடந்து விடும்.

22. மொய்சிதைக்கு மொற்றுமை யின்மை யொருவனைப்
பொய்சிதைக்கும் பொன்போலு மேனியைப்—பெய்த
கலஞ்சிதைக்கும் பாலின் சுவையைக் குலஞ்சிதைக்கும்
கூடார்கட் கூடி விடின்.

23. நகைநல னட்டார்க ணந்துஞ் சிறந்த
அவைநல னன்பின் விளங்கும் விசைமாண்ட
தேர்நலன் பாகனாற் பாடெய்தும்—ஊர்நலன்
உள்ளானா னுள்ளப் படும்.

24. கற்பக் கழிமட மஃகுமட மஃகப்
புற்கந்தீர்ந் திவ்வுலகின் கோளுணருங் கோளுணர்ந்தால்
தத்துவ மான நெறிபடரு மந்நெறி
இப்பா லுலகத் திசைநிறீஇ யுப்பால்
உயர்ந்த வுலகம் புகும்.

25. இரும்பி னிரும்பிடை போழ்ப பெருஞ்சிறப்பின்
நீருண்டார் நீரான்வாய் பூசுப—தேரின்
அரிய வரியவற்றாற் கொள்ப—பெரிய
பெரியரா னெய்தப் படும்.

26. ஈத்துண்பா னென்பா னிசைநடுவான் மற்றவன்
கைத்துண்பான் காங்கி யெனப்படுவான் றெற்ற
நகையாகு நண்ணார்முற் சேறல் பகையாகும்
பாடறியா தானை யிரவு.

27. பறைபட வாழா வசுணமா வுள்ளங்
குறைபட வாழா ரூரவோர்—நிறைவனத்து
நெற்பட்ட கண்ணே வெதிர்சாங் தனக்கொவ்வாச்
சொற்பட்டாற் சாவதாஞ் சால்பு.

28. மண்ணி யறிப மணிநலம் பண்ணைத்
தேறியபின் னறிப மாநல மாசறச்
சுட்டறிப பொன்னி னலங்காண்பார் கெட்டறிப
கேளிரா னாய பயன்.

29. கல்லிற் பிறக்குங் கதிர்மணி காதலி
சொல்லிற் பிறக்கு முயாமுதம்—மெல்லென்
றருளிற் பிறக்கு மறநெறி யெல்லாம்
பொருளிற் பிறந்து விடும்.

30. நிலத்திற் கணியென்ப நெல்லுங் கரும்புங்
குளத்திற் கணியென்ப தாமரை பெண்மை
நலத்திற் கணியென்ப நாணந் தனக்கணி
தான்செல் லுலகத் தறம்.

# நான்மணிக்கடிகை.

31. மறக்களி மன்னர்முற் றோன்றுஞ் சிறந்த
அறக்களி யில்லாதார்க் கீயுமுற் றோன்றும்
வியக்களி நல்கூர்ந்தார் மேற்றாங்—கயக்களி
ஊரிற் பிளிற்று விடும்.

32. மகனுரைக்குந் தந்தை நலத்தை யொருவன்
முகனுரைக்கு முண்ணின்ற வேட்கை—அகனீர்ப்
பிலத்தியல்பு புக்கா னுரைக்கு நிலத்தியல்பு
வான முரைத்து விடும்.

33. நீரான்வீ றெய்தும் விளைநில நீர்வழங்கு
பண்டத்தாற் பாடெய்தும் பட்டினங் கொண்டெய்தும்
நாட்டான் வீறெய்து மாமன்னன் கூத்தொருவன்
ஆடலாற் பாடு பெறும்.

34. பழியின்மை மக்களாற் காண்க வொருவன்
கெழுவின்மை கேட்டா லறிக பொருளின்
நிகழ்ச்சியா னாக்க மறிக புகழ்ச்சியால்
போற்றாதார் போற்றப் படும்.

# தாயுமானசுவாமிகள் பாடல்.

1. எனக்கெனச்செயல்வேறிலையாவுமிங்கொருநின்
றனக்கெனத்தகுமுடல்பொருளாவியுந்தந்தேன்
மனத்தகத்துளவழுக்கெலாமாற்றியெம்பிரானீ
நினைத்ததெப்படியப்படியருளுதனீதம்.

2. உளவறிந்தெலாநின்செயலாமெனவுணர்ந்தோர்க்
களவிலானந்தமளித்தனையறிவிலாப்புன்மைக்
களவுநாயினேற்கிவ்வணமமைத்தனைகருத்துத்
தளருந்தன்மையிங்காரொடுபுகலுவேன்றக்கோய்.

3. என்னைத்தானின்னவண்ணமென்றறிகிலாவேழை
தன்னைத்தானறிந்திடவருள்புரிதியேற்றக்கோய்
பின்னைத்தானின்றனருள்பெற்றமாதவப்பெரியோர்
நின்னைத்தானிகராரெனவாழ்த்துவர்நெறியால்.

4. ஏதமின்றித்தன்னடியிணைக்கன்புதானீட்டுங்
காதலன்பர்க்குக்கதிநிலையீதெனக்காட்டும்
போதநித்தியபுண்ணியவெண்ணரும்புவன
நாததற்பரநானெவவாறுய்குவேனவிலாய்.

5. நெறிகடாம்பலபலவுமாயந்தந்தநெறிக்காஞ்
செறியுந்தெய்வமும்பலபலவாகவுஞ்செறிந்தா
லறியுந்தன்மையிங்காருனையறிவினாலறிந்தோர்
பிறியுந்தன்மையில்லாவகைகலக்கின்றபெரியோய்.

6. பெரியவண்டங்களெத்தனையமைத்ததிற்பிறங்கு
முரியபல்லுயிரெத்தனையமைத்ததிற்குறுதி
வருவதெத்தனையமைத்தனையமைத்தருள்வளர்க்கு
மரியதத்துவவெனக்கிந்தவண்ணமேனமைத்தாய்.

7. கணமதேனுநின்காரணந்தன்னையேகருத்தி
லுணருமாதவர்க்கானந்தமுதலினையொன்றுங்
குணமிலாதபொய்வஞ்சனுக்கெந்தைநிர்க்குணமா
மணமுலாமலர்ப்பதந்தரின்யாருனைமறுப்பார்.

8. கன்னன்முக்கனிகண்டுதேன்சருக்கரைகலந்த
தென்னமுத்தியிற்கலந்தவர்க்கின்பமாயிருக்கு
நன்னலத்தநின்னற்பதந்துணையெனநம்பச்
சொன்னவர்க்கெனலாங்கைம்மாறில்லையென்சொல்வேன்.

9. தந்தைதாய்தமர்மகவெனுமவையெலாஞ்சகத்திற்
பந்தமாமென்றேபருமறையாயினுற்பகர்ந்த
வெந்தைநீயெனையின்னமவ்வல்லலிலிருத்திச்
சிந்தைதான்றெளிந்தெவ்வணமுய்வணஞ்செப்பாய்.

10. துய்யன்றண்ணருள்வடிவினன்பொறுமையாற்றுலங்கு
மெய்யனென்றுனையையனேயடைந்தனன்மெத்த
நொய்யனுண்ணியவறிவிலனென்றைநூறுக்கும்
பொய்யனென்றெனைப்புறம்விடினென்செய்வேன்புகலாய்.

11. ஒன்றதாய்ப்பலவாயுயிர்த்திரட்கெலாமுறுதி
யென்றதாயென்றுமுள்ளதாயெவற்றினுமிசைய
நின்றதாய்நிலைநின்றிடுமறிஞவென்னெஞ்ச
மன்றதாயின்பவுருக்கொடுநடித்திடின்வாழ்வேன்.

12. தனியிருந்தருட்சகசமேபொருந்திடத்தமியேற்
கினியிரங்குதல்கடனிதுசமயமென்னிதயக்
கனிவுமப்படியாயினதாதலாற்கருணைப்
புனிதநீயறியாததொன்றுள்ளதோபுகலாய்.

13. திருந்துசீரடித்தாமரைக்கன்புதான்செய்யப்
பொருந்துநாணல்லபுண்ணியஞ்செய்யுநாள்பொருந்தா
திருந்தநாள்வெகுதீவினையிழைத்தநாளென்று
லருந்தவாவுனைப்பொருந்துநாளெந்தநாளடிமை.

14. பின்னையன்னபொய்வாழ்க்கையேநிலையெனமெய்யா
முன்னைநான்மறந்தெவ்வணமுய்வணமுனையாய்
முன்னைவல்வினைவேரறமுடித்தென்றுமுடியாத்
தன்னைத்தன்னடியார்க்கருள்புரிந்திடுந்தக்கோய்.

15. எம்பராபரவெம்முயிர்த்துணைவவென்றிறைஞ்சு
மும்பரிம்பர்க்குமுளக்கணைநடிக்கின்றாயுன்ற
னம்பொன்மாமலர்ப்பதத்தையேதுணையெனவடிமை
நம்பினேனினிப்புரப்பதெக்காலமோநவிலாய்.

16. பாடியாடிநின்றிரங்கிநின்பதமலர்முடிமேற்
சூடிவாழ்ந்தனரமலநின்னடியர்யான்றொழும்ப
ஞடியேயிந்தவுலகத்தைமெய்யெனநம்பித்
தேடினேன்வெறுந்தீமையேயென்னினிச்செய்வேன்.

17. ஏதமற்றவர்க்கின்பமேபொழிகின்றவிறையே
பாதகக்கருங்கன்மனங்கோயிலாப்பரிந்து
சூதகந்தனுயாதினுமிச்சைமேற்றேன்றும்
வாதனைக்கிடமாயினேனெவ்வணம்வாழ்வேன்.

18. தெளிவொடுகையோவறிகிலானறிவிலான்சிறிது
மளியிலானிவன்றிருவருட்கயலெனவறிந்தோ
வெளியனுக்கினையென்செய்வேனென்செய்வேனெலலா
வொளியுமாய்நிறைவெளியுமாயாவுமாமுரவோய்.

19. கண்ணினுண்மணியென்னவேதொழுமன்பர்கருத்து
ணண்ணுகின்றநின்னருளெனக்கெந்தநாணணுகு
மண்ணும்விண்ணுமற்றுள்ளனபூதமுமாருப்
பெண்ணுமாணுமாயல்லவாய்நிற்கின்றபெரியோய்.

20. சகமெலாந்தனிபுரந்தனைதகவுடைத்தக்கோ
ரகமெலாநிறைந்தானந்தமாயினையளவின்
மகமெலாம்புரிந்தோரைவாழ்வித்தனைமாரு
விகமெலாமெனைப்பிறந்திடச்செய்ததேனெந்தாய.

# தாயுமானசுவாமிகள் பாடல்.

21. ஏய்ந்தநல்லருள்பெற்றவர்க்கேவலாயெளியேன்
வாய்ந்தபேரன்புவளர்க்கவுங்கருணைநீவளர்ப்பா
யாய்ந்தமாமறையெத்தனையத்தனையறிவாற்
றோய்ந்தபேர்கட்குந்தோன்றிலாத்தோன்றலாந்தூயோய்.

22. தக்கநின்னருட்கேள்வியோசிறிதின்றித்தமியேன்
மிக்கதெய்வமேநின்னின்பவெள்ளத்தில்வீழே
ஞெக்கறுய்தந்தைமகவெனும்பாசக்கட்டுடனே
துக்கவெள்ளத்திலாழ்கின்றேனென்செய்வான்றுணிந்தேன்.

23. பவம்புரிந்திடும்பாவியேற்கருணிலைபதியத்
தவம்செயும்படிதயவுசெய்தருள்வதேகரும
மவம்புரிந்திடார்க்கானந்தவமிர்தத்தையளிக்க
நவங்கொடத்துவத்திரையெறிகடலெனுநலத்தோய்.

24. உற்றுணர்ந்தெலாநீயலதில்லையென்றுனையே
பற்றுகின்றனரெந்தைநின்னடியர்யான்பாவி
முற்றுமாயமாஞ்சகத்தையேமெய்யெனமுதரு
னற்றிருந்திடத்தொழில்செய்வான்றனைநிகரானேன்.

# பெருமாள் திருமொழி.

1. ஊனேறுசெல்வத்துடற்பிறவியான்வேண்டேன்
ஆனேறேழ்வென்றானடிமைத்திறமல்லால்
கூனேறுசங்கமிடற்றான்றன்வேங்கடத்துக்
கோனேரிவாழுங்குருகாய்ப்பிறப்பேனே.

2. ஆனாதசெல்வத்தரம்பையர்கள்தற்சூழ
வானாளுஞ்செல்வமுமண்ணரசுமியான்வேண்டேன்
தேனார்பூஞ்சோலைத்திருவேங்கடச்சுனையில்
மீனாய்ப்பிறக்கும்விதியுடையேனாவேனே.

3. பின்னிட்டசடையானும்பிரமனுமிந்திரனும்
துன்னிட்டுப்புகலரியவைகுந்தநீள்வாசல்
மின்வட்டச்சுடராழிவேங்கடக்கோன்றானுமிழும்
பொன்வட்டில்பிடித்துடனேபுகப்பெறுவேனாவேனே.

4. ஒண்பவளவேலையுலவுதண்பாற்கடலுள்
கண்டுயிலுமாயோன்கழலிணைகள்காண்பதற்கும்
பண்பகரும்வண்டினங்கள்பண்பாடும்வேங்கடத்துச்
செண்பகமாய்நிற்குந்திருவுடையேனாவேனே.

5. கம்பமதயானைக்கழுத்தகத்தின்மேலிருந்து
இன்பமருஞ்செல்வமுமிவ்வரசுமியான்வேண்டேன்
எம்பெருமானீசனெழில்வேங்கடமலைமேல்
தம்பகமாய்நிற்குந்தவமுடையேனாவேனே.

6. மின்னனையநுண்ணிடையாருருப்பசியுமேனகையும்
அன்னவர்தம்பாடலொடுமாடலவையாதரியேன்
தென்னவெனவண்டினங்கள்பண்பாடும்வேங்கடத்துள்
அன்னனையபொற்குவடாமருந்தவத்தனாவேனே.

# பெருமாள் திருமொழி.

7. வானாளுமாமதிபோல்வெண்குடைக்கீழ்மன்னவர்தம்
கோனாகிவீற்றிருந்துகொண்டாடுஞ்செல்வறியேன்
தேனார்பூஞ்சோலைத்திருவேங்கடமலைமேல்
கானாறாய்ப்பாயுங்கருத்துடையேனாவேனே.

8. பிறையேறுசடையானும்பிரமனுமிந்திரனும்
முறையாயபெருவேள்விக்குறைமுடிப்பான்மறையானான்
வெறியார்தண்சோலைத்திருவேங்கடமலைமேல்
நெறியாய்க்கிடக்குநிலையுடையேனாவேனே.

9. செடியாயவல்வினைகள்தீர்க்குந்திருமாலே
நெடியானேவேங்கடவாநின்கோயிலின்வாசல்
அடியாரும்வானவருமரம்பையருங்கிடந்தியங்கும்
படியாய்க்கிடந்துன்பவளவாய்காண்பேனே.

10. மன்னியதண்சாரல்வடவேங்கடத்தான்றன்
பொன்னியலுஞ்சேவடிகள்காண்பான்புரிந்திறைஞ்சிக்
கொன்னவிலுங்கூர்வேற்குலசேகரன்சொன்ன
பன்னியநூல்தமிழ்வல்லார்பாங்காயபத்தர்களே.

# மக்பெத்.

சாத்மீகி எனச் சிறப்புப்பெயர் பெற்ற டங்கன் எனும் வேந்தன் ஸ்கொத்திலாந்தில் செங்கோல் செலுத்துநாளில், மஹாபிரபு ஒருவன் அங்கிருந்தான். அவன் நாமதேயம் மக்பெத்; அவன் அரசனுக்கு உதிரக்கலப்புள்ள சுற்றத்தான். இணையற்ற ரணசூரனென்று அவனுக்கு அரண்மனையில் மிக்க சம்மானமும் பிரதிஷ்டையும் உண்டு. சமீபகாலத்தில் ராஜபயமின்றி, கலகப்பிரியராகி, நோர்வைச் சேனைகளைத் துணைநிற்க உடன்படுத்தித் தண்டெடுத்து நெருங்கிய ராணுவவீரர் எண்ணிறந்தோரை, இந்த மக்பெத் படுகளத்தில் துணிவு குன்றாது எதிர்த்துப் பொருது சிதறடித்து அபஜயப்படுத்தி, அற்புத வீரதீரனென்று அழியாப் புகழ் நாட்டிய தளபதி.

இச்சண்டை முடிந்து, மக்பெத், பங்குவோ எனும் ஸ்கொத்திய சேனாபதிகள் இருவரும் ஜயபூர்வமாய்த் திரும்பிவருமார்க்கத்தில், கடுவெயிலில் உலர்ந்து தீந்த சம்பம்புல் வெளியில் விகாரரூபிகளாகிய ஸ்திரீகள் மூன்றுபெயர் சடிதியில் எதிர்ப்பட்டது கண்டு, அப்புறம் அடியெடுத்து வைக்காமல் நின்றார்கள். அவர்களுக்குத் தாடிரோமம் வளர்ந்திருந்தது—அதனால், அவர்கள் ஸ்திரீகளுமல்ல; அங்கம் திரைந்து ஆடைதரித்த கோலம் அவக்கோலமாயிருந்தது—அதனால், மண்ணுலகில், சஞ்சரிக்கும் மற்றெவருமல்ல. விவரம் சிறிதும் அறியாததுபற்றி, மக்பெத் "நீங்கள் யாவர், எங்குள்ளோர்?" எனக் கேட்டான். கேட்கவும், அந்த ரூபங்கள் அவன் சொல்லை நிந்தையென்று சிந்தையிற்கொண்டு வெறுப்புற்றதாக அவைகள் முகக்குறி விளக்கியது. அன்றியும் மௌனம் சாதிக்கும்வண்ணம், அவைகள் உலர்ந்து கமர்வெடித்த களிமண் தரைபோலப் பிளவுபட்டிருந்த கைவிரலை ஊன் கழிந்த வெறுந்தோல்மயமான உதட்டில் வைத்துக்கொண்டு நின்றன. பின்பு ஒன்று "கிளாமிஸ் பிரபூ" என மக்பெத்தை வாழ்த்தியது.

அச்சமயத்தில் அந்தரவனத்தில் அபிநவமாகத் தோன்றிய ரூபங்களுக்குத் தன்குலம் குறிதெரிந்த அதிசயத்தை நினைக்க நினைக்க, மக்பெத் மனம் துணுக்குற்றது. அதன்மேல் மற்றொன்று "கௌடர் பிரபு, நீ வாழி" என மங்களம் பாடியது. அவன் அந்தப் பட்டவர்த்தனனே அல்ல: ஆனதுபற்றி, அவன் மனம் பின்னும் பதின்மடங்கு திடுக்கிட்டது. அப்பால் மூன்றாவது ரூபம் "வாழ்க, வாழ்க—இனி நீ கிரீடாதிபதி ஆவாய்" என்று ஆசீர்வசனங் கூறியது. தீர்க்கதரிசன பூர்வமாய்ப் பிறந்த இவ்வாக்குக் கேட்டு, மக்பெத்துக்கு உண்டான அச்சாதிசயம் இவ்வளவென்று சொல்லித் தொலையாது. "சொல்வார் சொன்னாலும் கேட்பார்க்கு மதி இல்லையா." அரசனுக்குப் புதல்வர் ஒருவனுக்கு இருவர் இருப்பது அறிந்த மக்பெத், மலடி மகன் என்றாற்போல் மாயாரூபம் சொல்லிய வாக்கை வாஸ்தவமென்று எண்ணி வியர்த்தமாய் மனமகிழ்ந்து ஏமாற மதிகேடன் அல்லவே. பின்பு அந்த மாயினிகள் பங்குவோவை ஏற இறங்கப் பார்த்து, "நீ மக்பெத்திலும் சிறியோனாயினும், பெரியோன்! அவ்வளவு பாக்கியனல்லாதிருந்தும், அவனிலும் அதிக பாக்கியன்! எனச் சிலேஷோத்தியாகப் பேசி, பட்டத்தில் வீற்றிருக்கும் அதிர்ஷ்டம் உனக்கு இல்லை. உன் காலம் கழிந்தபின் உன் குமாரர்கள் ஸ்கொத்திலாந்தில் ராஜ்யபாரம் தாங்குவார்கள்" என்பதாகப் பின் நடப்பவைகளை முன் குறிப்பித்தன. அப்பால் அந்தரவாசிகளாகிய மாயினிகள் நொடிக்குள்ளே மறைந்தன. அதனால், தளபதிகள் இருவரும் தங்கள் கண்ணுக்குத் தோன்றி மறைந்தவைகள் மாயாரூபிகளென்று எண்ணமிட்டார்கள்.

அந்தரவனத்தில் அற்புதமாய் வெளிப்பட்டு, சொப்பனத்திலும் நினைக்காத சோபனவார்த்தைகளைத் தூரதிர்ஷ்டி சக்தியுடையவைகள்போலச் சொல்லி, காற்றாய்ப் பறந்த மாயாரூபிகளின் அதிசயத்தை அவர்கள் மனத்தராசில் தூக்கிப்பார்த்துக்கொண்டு நிற்கையில், அரசன் அனுப்பிய தூதர்கள் சிலர் அவர்கள் அண்டையில் சேர்ந்து, மக்பெத்துக்கு கௌடர் பிரபுப்பட்டம் சூட்டியதாக அறிக்கைசெய்ய ராஜகட்டளை பிறந்தது என்றார்கள். அவர்கள் சொல்லும், மாயாரூபிகள் வாக்கும் அற்புதமாக ஒத்திருந்தது கண்டு, மக்பெத் ஆச்சரிய பரவசமடைந்தான். தூதருக்கு மறு

மொழி சொல்ல அவன் நா எழவில்லை. மாயாரூபிகள் மறைந்து மறையாமுன், அவைகள் வாக்கு ஒன்று அணுவும் தவறாமல் பலித்ததனால், நாளடைவில் அனைத்தும் நிறைவேறுமென்று அவன் உள்ளத்தில் உறுதி பிறந்தது. ஸ்கொத்லாந்தின் கிரீடாதிபதி ஆகும் தினம் கிட்டுமென்று எண்ணி, அவன் உள்ளம் பூரிக்க, உரோமம் புளகித்தது.

பின்பு மக்பெத் பங்குவோவை நோக்கி: "சொல்லக்கேளும் இஷ்டரே, எனக்கு மாயினிகள் சொல்லிய மங்கலவாக்கின் அதிசய சித்தியை நாம் நாலடி பெயர்ந்து செல்லுமுன் பிரத்தியக்ஷமாய்க் கண்டோமல்லவா? இனி உம்முடைய மைந்தர் வேந்தராவாரென மாயாரூபம் சொல்லிய வாக்கியம் பொய்க்குமென்றுமயங்க நிமித்தம் இல்லையே" என்றான். இவ்வாய்ப்பிறப்புக் கேட்ட பங்குவோ தளகர்த்தன் "கெடுகாலம் கிட்டினால், புத்திசக்தி யுள்ளவர்களும் புத்திகெட்டலைவார்கள்; விபரீதத் துறைகளில் துணிவோடு இறங்கித் தப்ப வகையின்றித் தத்தளிப்பார்கள். மாயினிகள் சொல்லை உறுதியென்று எண்ண எண்ண, உமக்கு மகுடவர்த்தனராகும் ஆசை மேலுமேலும் பெருகும். ஆனாலும் ஏன் வீணாக மனோராச்சியம் பண்ணுகிறீர்? முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டால், அது கிட்டுமா? பாராபாரம் அறிந்து நடப்பவர்க்கு ஒருபொழுதும் அச்சம் இல்லை; தீங்கு விளையாது. எந்நாளும் அழியாதெரியும் நரகில் விழுத்த இதம் சொல்லும் இயற்கையுள்ள தூதராகிய மாயினிகள் உமக்கு அற்ப விஷயத்தில் சித்திகாட்டியது உம்மை ஈடேற்றவல்ல; இறங்காத் துறையில் இறக்கிப் படுகுழியில் விழுத்த. உள்ளதை உறுவதைச் சொன்னேன். உம்மிடத்தில் ஏதும் கிரகித்துக்கொள்ளவாயினும், உமது மனதிற்கு இதமற்ற வார்த்தை சொல்லி, உம்மை வெயிலில் புழுப்போல் வருத்தி வேடிக்கை பார்க்கவாயினும் நான் இப்படிச் சொல்லத் தலைப்பட்டேனென்று நிர்நிமித்தமாய் எண்ணவேண்டாம். கைப்பொருள் காணக் கண்ணாடி வேண்டுவதேன்? நீர் பக்திசிரத்தையாய் வழிபடும் குரு எதிர்நின்று சொல்லும் மந்திரமென்று இதைச் சிந்தையில் இருத்திக்கொள்ளும்" என மறுமொழி சொன்னான்.

வஞ்சகத்திற்கு முதற்பாதமாகிய மாயினிகள் சொன்ன சூதுமொழியைச் சதமென்று எண்ணி, சிங்காதனத்தின்மேற் கருத்துச்

செலுத்தி, உடுப்பது உண்பது மறந்து, சிந்தை வெந்து நைந்துருகிய மக்பெத்துக்கு பங்குவோ சொல்லிய அருமருந்தன்ன சொல் நாராசம் காய்ச்சி நடுச்செவியில் வைத்ததுபோல் இருந்தது.

மாயினிகள் மனம் களிகூரத்தக்க வருங்காரியங்கள் சொன்னதும், அவற்றில் ஒன்று விரைவில் பலித்ததுமாகிய நற்செய்தியை மக்பெத் வீடு சேர்ந்தவுடன் மனைவிக்குத் தெரிவித்தான். அவள் வாதும் சூதும் குடிகொள்ளும் மனதுடையவள்; பூனைபோல் இருந்து புலிபோலப் பாயும் இயற்கையுள்ளவள்; ஸ்கொத்திய ராஜ குடும்பத்திற்கு ஒரு நீலி; எவர் குடி கெடுத்தும், என்னென்ன துரோகம் செய்தும், தன் நாயகனுக்குப் பட்டம் கட்டித் தானும் அவனும் பெருவாழ்வு வாழும் அபிலாசமுள்ள அவளுக்கு மக்பெத் வாய்மொழி பழம் நழுவிப் பாலில் விழுந்தாற்போல் மிகு மனோரஞ்சிதமாயிருந்தது. பதருமற் சிந்தனை செய்த அளவில், கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை என்றாற்போல, மக்பெத் பட்டத்தில் வீற்றிருக்க விரும்பியும், பிராணவதை செய்து ரத்தப் பழிக்கு ஆளாகவோ, அவன் மனம் பின்னிட்டது. மக்பெத் பிராட்டியோ, பாவம் பழிக்கு அஞ்சாதவளாதலால், எந்தவிதமும் முந்த அரசனைக் கொன்றாலன்றி, மாயாரூபிகள் வாக்குப் பலிப்பது அசாத்தியமென்று சாதித்து, தான் செய்யும் சர்ப்பனைக்குத் தடையின்றி உடன்படத் தன் கணவனைப் பலவாறு தூண்டினாள். இப்படி இருக்கையில், ராஜ்யத்தில் உள்ள பட்டவர்த்தனர் முதலிய மகா பிரபுக்கள் வீட்டுக்கு அப்போதப்போது ராஜபரிவாரத்துடன் போய் விருந்துண்டு வழக்கப்பட்டிருந்த அரசன், பகைஞரை முறியடித்து வெற்றிபெற்று வீராவேசத்துடன் திரும்பிய மக்பெத் தளபதிக்கு முக்கியமாய் உபசாரவார்த்தை சொல்லும்படி, மைந்தர் இருவரோடும் பிரபுக்கள்முதலிய பரிஜனத்தோடும் அவன் வீட்டுக்குப் பவனிபோனான். அரசன் புதல்வர் பெயர் மால்கம், டொனல்பேன்.

மக்பெத் மாளிகை சௌக்கிய அபிவிர்த்திக்கு அனுகூலமாய் வாய்க்கும் இடத்தில் சமைந்திருந்தது. அவ்விடம் நிலவளம், நீர் வளம், சோலைவளம், தோப்புவளம் யாவும் குறைவற அமைந்தது. அங்குலாவும் இளங்காற்றுத் திவ்வியமானது. இதற்குத் திர்ஷ்டாந்தம் அவ்வலங்காரமண்டபத்தின் அணைசுவர், கபோதகம்,

குறடு, திரணை முதலிய உறுப்புகளில் வளமான சந்துபொந்து பார்த்துத் தூக்கணங்குருவிகள் கூடுகட்டிச் சுகித்திருப்பதே. அற்பமாயினும் காற்று நலம் இல்லாத இடங்களில் அந்த ஜாதிக் குருவி சஞ்சரிப்பதில்லை. அந்தச் சிங்காரமண்டபத்திற் சேர்ந்து, அதன் விசித்திரத்தையும் சௌகரியத்தையும் கண்டு மனமகிழ்ந்த அரசன் நிலத்தாமரை மலர்போலு முகமும், செவிக்கு இனிய கிள்ளை மொழியும், கடுவிஷம் கக்கும் அகமுமுள்ள மக்பெத் பெருமாட்டி செய்த வாக்குபசாரம், மாயநட்பு, ஒப்பாசாரங்களால் ஆனந்த பரவசமடைந்தான். அம்மாதுக்கு 'அடிநாக்கு நஞ்சு, நுனிநாக்கு அமுதம்.' இவ்வந்தரங்கம் அரசனுக்கு அறிந்தோர் சொல்லாமல் தெரியும்வகை என்ன?

தொலைவழிப் பிரயாணத்தால் இளைப்புற்றதுபற்றி, விரைந்து விருந்துண்டு வார்த்தையாடி, நாழிகை செல்லுமுன் அரசன் மிருதுவான பஞ்சணைமெத்தை இட்ட நவரத்ன கசித மஞ்சத்தில் பள்ளிகொள்ளப் போனான். போகுமுன், அம்மாளிகையிற் பெற்ற விசேஷ மரியாதை உபசாரணைகளைத் தொட்டுக் களிகூர்ந்து, பிரதான உத்தியோகஸ்தர்களுக்கு அவரவர்க்குரிய பரிசு கொடுத்தான். அன்றியும், அரசன் மக்பெத் பிரபு பத்தினியை வாழ்த்தி உபசரித்து, பட்டைதீர்ந்த விலை உயர்ந்த வைரப்பதக்கம் ஒன்று கொடுத்தான். வழக்கப்படி அரசன் பள்ளியறைக்குள் பணிசெய்யும் கையாட்கள் இருவர் படுத்திருந்தார்கள்.

கோனும் கொலைபாதகருமன்றி, மற்ற மனுஷர், விலங்கினம் யாவரும் யாவும் மெய்ம்மறந்து நித்திரைசெய்ய, பாதிப்பேர் பயங்கரமான சொப்பனம் கண்டு நாக்குளறி நடுநடுங்க, தேசமெங்கும் நிசப்தமாயிருக்கின்ற அர்த்தராத்திரியில், மக்பெத் பெருமாட்டி அரசனைச் சர்ப்பனைசெய்து கொல்ல விழித்தெழுந்தாள். ராஜாதிகாரம் செலுத்தி, போராண்மையும் பெருந்தகைமையுமுள்ள வள்ளலென்று எவரும் போற்ற இடம்பெறும் ஆசை மக்பெத்திற்கு நாளொருமேனி பொழுதொரு வண்ணமாக வளர்ந்தும், அயல் உடைமைக்கு அவன் பேயாய்ப் பறந்தும், அகத்தில் ஒன்றும் புறத்தில் ஒன்றும் செய்யும் துர்க்குணமும், அடுத்திருந்து கழுத்தறுக்கும் நயவஞ்சகமும் அவனுக்கு லவலேசமும் இல்லை. அவன் இளநெஞ்சன்; தயைதாக்ஷிணியமுள்ளவன்; பழிக்கு அஞ்சும் உத்

தமன். இந்த இயற்கையைத் திட்டமாய் அறிந்ததனால், அவன் மனைவி தன் முயற்சியின்றிச் சர்ப்பனை நடந்தேறாதென்று தானே அவனைத் தூண்டிவிடத் தலைப்பட்டாள். வரம்புகடந்த பேராசையுள்ளவர்கள் நாள் ஏற ஏற, அவ்வாசை எனும் பேயின் வசப்பட்டு, எவ்வித அக்கிரமத்திற்கும் முந்தி நிற்பார்களாயினும், அவ்வாசை மக்பெத்துக்கு இன்னும் முதிராததனால், அவன் பழிக்கு எளிதில் ஆளாகானென்று அவன் மனைவி அறிந்தாள். துன்புறுவோர்க்கு இரங்கி உருகுவதும், பிறர் உயிர்க்குத் தீங்குசெய்யப் பின்னிடுவதும் தன் கணவன் சாதகமென்றும், அவனை நம்பிவிட்டால் நினைத்த கருமம் தலைக்கட்டாதென்றும் எண்ணி, மக்பெத் பெருமாட்டி கட்டாரி கைக்கொண்டு, ராஜேந்திரனாகிய டங்கன் பள்ளிகொண்ட அமளிக்குத் துணிவுடன் கிட்டினாள். அரசன் பள்ளியறைக்குள் படுத்திருந்த காவற்சேவகர் இருவரையும் அந்தச் சூது குடிகொண்ட மனதுடையாள் முன்னதாகவே லாகிரி யெடுக்க மதுமாமிசம் உண்பித்தாள். தங்கள் சேவகத்தைக் குறித்து அவர்களுக்குக் கனவிலும் நினைவு இல்லை. அவர்கள் கொடுவாய் ஒடி வடியக் குறட்டைவிட்டு மெய்ம்மறந்து அயர்ந்து தூங்கினார்கள். இந்தக் காரணத்தினாலேயே பிரபு பத்தினிக்குப் பேராண்மையுள்ள ரணசூரனுக்குரிய பராக்கிரமம் உண்டாயிற்று. அவள் கிட்டியபொழுது, பகற்பிரயாணத்தில் இளைப்புற்றதுபற்றி அரசன் சுழுத்தி அவஸ்தையில் இருந்தான். மக்பெத் பிராட்டி வேந்தன் முகத்தைச் சிந்தை சிதறாமல் உற்றுப்பார்த்து, அது ஒருவாறு தன் தந்தை முகத்திற்குச் சமானமென்று கண்டாள். கண்டவுடன், நெஞ்சிற்கொண்ட கொலைக்கருத்தை மறந்து கை சோர்ந்து மெய் நடுங்க, போனவழியே திரும்பித் தன் நாயகனைக் கண்டு பேசினாள்.

அவள் சொற்கேட்டு, அவன் சித்தம் சலித்தது. இருவரும் மனம் பொருந்திச் செய்யக் கருதிய படுகொலைத்தொழில் சிறிதும் தகாதென அச்சமயத்தில் அவன் உள்ளத்தில் பிறந்த பலமான நியாயாதாரம் இது:—முக்கியமாய் நாலு குடிகளில் நானும் ஒருவன்; அதுதவிர, அரசனுக்கு உதிரசம்பந்தம் நெருங்கிய சுற்றத்தான்; அன்றியும், இன்று நான் இந்த முறைமையுள்ள ராஜனுக்கு மனமகிழ்கூர்ந்து முகமலர்ந்து சம்பிரம விருந்து செய்தேன். விபரீத புத்தியால் சோற்றில் நஞ்சிடும் துரோகிகள் சேரும் கதியை

நான் வலியத் தேடிக்கொள்வானேன்! அதிதி உயிரைக் கன்னமிட வரும் சண்டாளரை ஆக்குரோஷத்துடன் தடைசெய்வதல்லவோ அன்னமிட்டோன் செய்யத்தகும் கடமை? அன்னமிட்டு அயர்ந்து தூங்குவித்து, தலை கொய்யக் கத்தி கைக்கொள்ளும் தகாத தீவினை நொடிப்பொழுதேனும் தெய்வத்திற்கு ஏற்காதே. மேலும், இவ் வரசன் என்ன, சாமானியனா? சத்துருக்களை அச்சுறுத்தி அடிப் படுத்தும் அபூர்வ ஆண்மையுள்ளவன்; தன் நிலத்தில் வாழும் குடிகளின் ஜீவனையும் சொத்தையும் தன் ஜீவனெனவும் சொத்தென வும் பாவித்து ரக்ஷிக்கும் மாட்சிமையுள்ளவன்; குலத்திலும் குணத்திலும் சிறந்த பட்டவர்த்தனர் முதலிய பிரபுக்களைப் பக்ஷமாய் அணைத்து உறவு பாராட்டுபவன்; எனக்கு விசேஷ மரியாதை செய்பவன்; அருளுக்கு இருப்பிடம்; நீதிக்கு வரம்பு; சிறியோர் பெரியோர் அனைவரும் புகழும் சற்குணக் குன்று. இத்தகைமையுள்ள ராஜோத்தமர்களுக்கு அடியார்க்கு அடியனாகிய கடவுள் முக்கியமாய்த் துணைநிற்பார். அன்றியும், கெடுமதி குடி கொள்ளும் நச்சுநெஞ்சுள்ள படுபாதகன் எவனாவது இவ்வகை அரசனை வதைசெய்தால், அந்த ராஜதுரோகியைத் தப்பவொட்டாமல் யாவரும் ஒத்துக் கொலைசெய்து பழிதீர்ப்பது பிரஜைகள் கடமை. அல்லாமலும், அரசன் என்னிடத்தில் லக்ஷியம் வைத்து எனக்குப் பலவாறு சலுகை தந்திருப்பது அறிந்த சமஸ்த ஜனங்களாலும் எனக்கு உண்டாயிருக்கும் லோகப்பிரசித்தமான கீர்த்தியை ராஜகொலைசெய்து பாழில் போக்கடிப்பது முறையா!

மக்பெத் பெருமாட்டி கணவனிடத்திற்குப் போனபொழுது, அவன் மேற்சொல்லிய சிந்தனைகளால் மிகுமனோபத்திரவமடைந்து, நெஞ்சம் என்னும் கடுங்கல் நெகிழ்ந்துருகி, கொலைபுரியச் செய்த பிரதிக்ஞையைத் தகாதென நிறுத்திவிட நினைத்திருந்தான். "ஆடாமல் ஓய்ந்திட்ட பம்பரம்போல் விசை அடங்கி" அவன் மனம் வீழ்ந்தது. நற்குடியிற் பிறந்தும் உற்றாரை ஈடழிக்கும் கெடுநினைவு நிமிஷமேனும் நெஞ்சிற் குடிகொள்ள விடுவது இவ்வையகத்தில் உய்ய வாஞ்சித்திருக்கும் குடும்பத்திற்கு உதவாதென்று கணவன் இடித்துரைக்கக் கேட்டும், அப்படுபாதகி பிடித்த விரதம் முடிப்பதே கருமமென்று கங்கணம் கட்டினாள். அவள் மனம் சிறிதும் உருகவில்லை. அது வன்னெஞ்சோ, இரங்காத மரநெஞ்சோ, இருப்புநெஞ்சோ, வைரக்கன்னெஞ்சோ எத்தன்மை

புள்ளதென்று வரையறுப்பது அரிது. உடலும் உள்ளமும் மெலிந்திருப்பதுபற்றி மெல்லியல் எனப் பெண்ணுக்கு வழங்கும் பெயர் இந்நீலிக்கு ஏற்காது. அவள் தன் ராக்ஷச மனவலியைச் சமயோசித வசனத்தால் கணவன் செவிவழியாய்ப் புகட்டினுள்; நினைத்த கருமம் முடிக்கும் துணிவின்றிப் பின்னிடைந்துபோவது ஆண்மைக்கும் சித்திக்கும் பின்னமென்று, அம்புமேல் அம்பு எய்து உதிரம் வடிய நெஞ்சைத் தொளைப்பதுபோல், அவன் உள்ளத்தில் ரோசம் பிறக்க ஆய்ந்து பல நியாயம் அடுக்கிச் சொன்னுள். அவள் சொல் இது:—"எனது உயிர்க்குயிரான ஆசைமணுளரே, கேளும்; ஆடிய கறங்குபோல் ஓடி உழல் சிந்தையை அடக்கி, ஒரு நொடிப்பொழுதில் நீர் நினைத்த கருமம் முடிப்பது எளிது. சமயம் முந்துமுன் இன்றிரவு சிந்தித்தவாறு பதருமல் செய்வீராஞல், காரியம் சிதருது. உள்ளநாள் உள்ளமட்டும் உலகத்தை ஆண்டு, ஓங்குபுகழ் பெற்று, ராஜோத்துங்கஞக வாழ்ந்திருக்கலாம். நினைவு நீர் கலங்கிஞல் நிற்குமோ பூமி—எதிர்த்த போரில் முன்பின் எண்ணமின்றி, மாற்றரசர் கருவறுத்துப் பகைமுடிக்கும் ரணமத்தராகிய உமது மனம் சலிப்பது என்ன விபரீதம்! டங்கன் மன்னனைப் பிராணவதைசெய்ய நீர் பிரதிக்கினை செய்தபடி பெண்பேதையாகிய நான் படுகொலைபுரியச் சபதம் சொல்லியிருப்பேஞஞல், பரிவாகப் பெற்றெடுத்துப் பால் ஊட்டி வளர்க்கும் பசுங்குழந்தையாஞலும், பெற்ற உரிமையைப் பெரிதென்று எண்ணுமல் மூளை சிதற ஒரு வீச்சில் விசையாகத் தரையில் வீசிச் சபதம் முடிப்பேன். ஒரு பெண்ணுக்கு உள்ள துணிவு ரத கஜ துரக பதாதிகளை அணிவகுத்து அருஞ்சமர் புரியும் ஆண்மையுள்ள தளபதியாகிய உமக்கு இல்லையா? அன்றியும் சிந்திக்குமிடத்தில், அரசனைக் கொன்ற பழி உம்மைச் சுற்றிக்கொள்ளுமென்று அஞ்சுவதற்குச் சிறிதேனும் நிமித்தம் இல்லையே. நீர் அரசனைக் கொன்று, அவன் பள்ளியறையில் மதுஉண்டு மதிமயங்கிப் பிரேதம்போல மெய்ம்மறந்து தூங்கும் காவற்சேவகர்மீது கொலைக்குற்றம் சாற்றிஞல், யுத்திபுத்தியுள்ள எவரும் உள்ளதென்று ஒப்புக்கொள்ளாதிரார். இனி நீர் இப்படிச் செய்யத் தடை என்ன? இதிற் பிரமாதம் என்ன? எழுந்திரும், நாழிகை செல்லுகின்றது. நித்திரையுமற்று, நினைத்த காரியசித்தியுமற்று, வீணிற் காலம் போக்குவானேன்?" இவ்வாறு அந்த ராக்ஷசி தன் நாவலியால் சஞ்சல

சித்தம் போக்கி, மக்பெத்துக்கு வீராவேசம் வருத்தவும், அவன் பின்னும் ஒருமுறை தீரமுடையோனாகி, குரூரவதை செய்யச் சிந்தைகூர்ந்தான்.

பின்பு மக்பெத் கட்டாரி கைக்கொண்டு, அரவம் கேளாவண்ணம் அடிமேல் அடிவைத்து இருளில் நடந்து, டங்கன் சயன மண்டபத்திற்குப் போனான். போகுமார்க்கத்தில் அந்தரத்தில் மற்றொரு கட்டாரியைக் கண்டான். அதன் கைப்பிடி அவன் முகத்திற்கு எதிராகத் திரும்பியிருந்தது. கட்டாரி அலகிலும் முனையிலும் உதிரம் துளி துளியாய் ஒழுகியது. அவன் அதைப் பிடிக்கத் தாவினான். அது கைக்கு அகப்படவில்லை; சுத்த சூனியமாயிருந்தது. கண்டது கட்டாரியே அல்ல, கேவல மாயாரூபம். அஞ்சினவன் கண்ணுக்கு ஆகாயம் எல்லாம் பிசாசுதானே.

அச்சம் தவிர்ந்து, அமளியிற் புகுந்து, மக்பெத் கட்டாரியால் அரசனை ஒரு குத்திற் கொன்றான். அவன் இச்சதிக்கொலை புரியவும், அங்குள்ள காவலர் இருவரில் ஒருவன் அயர்ந்த நித்திரையில் கெக்கலிகொட்டி நகைக்க, மற்றவன் நெட்டுயிர்த்துத் தட்டழிந்து உளறுவான்போல் ''படுகொலை'' என நெடுங்குரல் பாய்ச்சிக் கூவினான். அவ்வளவில் இருவரும் விழித்தெழுந்து இடையறாது எங்கும் நிறைந்து யாவர்க்கும் அவரவர் இருவினைக்குரிய பலன் அளிக்கும் பாதுக்கனாகிய பரப்பிரமத்தை இரண்டொரு சொல்லில் இதய பூர்வமாய்ப் பிரார்த்தித்தார்கள். அவர்கள் பிரார்த்தனை இது:—(ஒருவன்) ''இறைவனே, அருள்சுரந்து அடிகள்மீது இரங்கும்.'' (மற்றவன்) ''ததாஸ்து.'' இவ்வாறு சுருங்கப் பிரார்த்தித்து, மீண்டும் துயின்றார்கள். மேற்படி பிரார்த்தனையைச் செவி சாய்த்துச் சிந்தை செலுத்திக் கேட்ட மக்பெத் தானும் அவருடன் மனம் வாக்கு ஒத்துச் செபிக்க நினைத்து ''ததாஸ்து'' என்று சொல்ல உன்னினான். உன்னி உச்சரித்த அம்மொழி ஒலி அவன் மிடற்றினின்று பிறக்கவில்லை; மிடற்றோடு ஒட்டிக் கொண்டது.

மீண்டும் அவனுக்குப் பின்வருமாறு ஆகாசவாணி கேட்டது:—''இனி நித்திரை செய்யாதிருங்கள். நித்திரையை, பாவம் பழி அறியா நித்திரையை, உயிர் ஓம்பு நித்திரையை மக்பெத்

வதைக்கிருன். இனி நித்திரை செய்யாதிருங்கள். கிளாமிஸ் நித்திரையை வதைத்திட்டான். அதனுல், கௌடர் இனி நித்திரை செய்யான். மக்பெத் நித்திரை செய்யான்."

இவ்வசரீரிவாக்குக் கேட்டு உள்ளம் பதற, மெய் உதற, ரோமம் சிலிர்க்க, மக்பெத் மனைவி பள்ளிகொள்ளும் அந்தப் புரத்திற்குப் போனுன். அவன் வாய்மொழி கேட்டு மனம் களிகூர நினைந்திருந்த அம்மாது அவன் தடுமாற்றத்தையும், தளர்ச்சியையும் கண்டு, சிந்தித்த கருமம் எவ்வாருே சித்திக்கவில்லையென்று எண்ணி, ஆண்பிள்ளையென்று உலகத்தில் உடம்படுத்தும், போர்முகத்தில் புருஷசிங்கமென்று பூபதியால் புகழ்ச்சி பெற்றும், சமயத்தில் உமது மனவுறுதி அறுவது அழகல்லவேயென்று கணவனைக் குறைகூறினுள். பின்பு கையிற் புரண்ட உதிரக்கறை கழுவித் துடைத்து வரக் கணவனை ஸ்நாநாலயத்திற்கு அனுப்பிவிட்டு, அவள் கட்டாரி எடுத்துக் கொண்டுபோய்க் காவலர்க்கு அயலில் வைத்து, இருவர் முகத்திலும் ரத்தம் தொட்டுத் தடவிய பின், தன் அறைக்குத் திரும்பினுள்.

நள்ளிருட்பொழுது கழிந்து மறுநாள் அதிகாலையில் கிழக்கு வெளுக்க, நடந்த கொலையும் வெளுத்தது. புலையர்க்குரிய படுகொலைத்தொழில் நீடித்து மறைந்திருப்பது இயற்கை அல்லவே. காவற்சேவகர் பக்கத்தில் உதிரம் படிந்த கட்டாரி,

"கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவா ரகத்து."

கண்கூடாய்த் துலங்க, முகத்தில் செங்குருதி புரண்டு முடைவீச, இவ்விரு குறிகளும் அவர்களே ஸ்வாமித்துரோகம் செய்த பரம சண்டாளரென்று கண்டவர்கள் எளிதில் நம்பத்தக்க பலமான சாதனங்களாயிருந்தன. 'இருந்தும், மக்பெத் பெருமான், பெருமாட்டி இருவரும் மனம் பதைத்து வருந்தி ஆருத்துயரில் ஆழ்ந்தவர்போல மாயமடித்தும், யாவருக்கும் மக்பெத் பெயரிலேயே பலமான சமுசயம் பிறந்தது.

டங்கன் வேந்தன் பெற்ற பெருஞ்செல்வத்தை இச்சித்து மகபெத் அவனை வதைத்தால் வதைத்திருப்பானேதவிர, ஊர் பெயர் இல்லாத மதிகெட்ட பஞ்சைகளாகிய காவலர் அன்னமிட்டுத் தம்மை ரக்ஷிக்கும் அரசனை அன்னிய கிரகத்தில் அதிதியா

யிருக்கும் சமயத்தில் மிதித்த கிளையும் தறிந்து, பிடித்த கிளையும் தறிப்பதுபோலக் கழுத்தறுக்குக் கொல்லை நிமித்தம் இல்லையே. "நாய் வாழ்ந்தென்ன; பூனை தாலி அறுத்தென்ன" எனப் பழமொழியும் இருக்கின்றதே. அந்தச் சேவகர் அரசனைக் கொன்று, அற்புதமாய் அரசாளப் பெறினும், தமக்கும் பிறர்க்கும் பயன் அற்றுப்போவதொழிய மற்றென்ன மிச்சம்?

மக்பெத் அதிதி பூசைசெய்து, ஆசையோடு அளவளாவுவான் போல மாயநட்புக் காட்டி அர்த்தராத்திரியில் கழுத்தறுத்து வதைத்த டங்கன் மன்னன் பெற்ற செல்வப் புதல்வர் இருவரும் தந்தைக்கு உற்ற அபலச்சாவைக் கண்டு, அசதியில் அநாதரானோமென்று தந்தலைவிதியை நொந்து, தமக்கும் இதுவே கதியாகுமுன், ஜேஷ்டனாகிய மால்கம் அங்கிலேய அரண்மனைக்கும், கனிஷ்டனாகிய டொனுல்பேன் ஐர்லாந்திற்கும் அடைக்கலம் தேடித் திவிரித் தோடித் தப்பினுர்கள்.

பட்டத்திற்குப் பாத்தியஸ்தராகிய ராஜபுதல்வர் இவ்வாறு தங் கைப்பொருளைப் பிறர் கையிற் கொடுக்கும் பேதையர்போல் அரசுரிமை கைவிட்டுத் தேசாந்தரம் போனதனுல், கிரீடம் அடுத்திருந்த பாத்தியஸ்தனுகிய மக்பெத்திற்கு அமைந்தது. அமையவே, மாயினிகள் கூறிய பூர்வதரிசன வாக்குத் தவறின்றி எழுத்தெழுத்தாகப் பலித்தது.

எண்ணரிய ராஜவைபவங்களை இச்சித்தவாறு எளிதிற் பெற்றும், மக்பெத்திற்குப்பின் முடிதாங்கு மன்னர் அவன் சந்ததியாரல்ல; பங்குவோவின் சந்ததியாரென்று மேற்படி மாயினிகள் வாக்கினின்று பிறந்த பூர்வதரிசனக் குறிப்பு மக்பெத், மனைவி இருவர் இருதயத்திலும் சிலையில் எழுத்துப்போல் அழியாதிருந்தது. இந்தக் குறிப்பை எண்ணி, எங்கள் பரம்பரையில் நீடித்திருக்குமென்று ரத்தப்பழிக்கு அஞ்சாமல் அதிதியைச் சதிக்கொலை செய்து அரிதிற் பெற்ற அதிசயவரமாகிய ராஜாதிகாரம் விழலுக்கு இறைத்த நீர்போல, பங்குவோவின் புத்திரர் பௌத்திரர்க்குப் பயன்படப் போகின்றதே; ஏறவிட்டு ஏணியை வாங்கும்வண்ணம், தெய்வம் எங்களை ஏமாற்றியதே; குறுநிலமன்னர் அடிபணிய, குவலயத்தை ஆளுமென்று குதுகலிப்புடன் எண்ணமிட்டிருந்த எங்கள் குலம் கீழோராகிய அந்நியர்க்குக் கொத்த

டிமை செய்வது முறையோ! இது யார்செய்த தவக்குறையென மக்பெத்தும் பத்தினியும் மனம் நொந்து, மதிமயங்கி, சோகித்து விழுந்து அலறி, ஒருவாறு தடுமாற்றம் நீங்கியபின் எழுந்து, ஒருவரை ஒருவர் தேற்றிக்கொண்டார்கள். பங்குவோவின் சந்ததியைச் சுட்டிய மாயினிகள் சொற்குறிப்பைத் தவிர்க்குமாறு, அவனையும் அவன் மைந்தனையும் தந்திரமாய் வரவழைத்து, அந்த ரங்கவதை செய்யச் சங்கற்பித்தார்கள்.

இதன்பொருட்டு அவர்கள் கைத்தாராளமாகப் பணச்செலவிட்டு, மிக்க சம்பிரம விருந்து செய்யக் கருதி, குலமக்கள்—துரைமக்கள் அனைவர்க்கும் ஓலை போக்கி, அவ்விருந்திற்கு வரவழைத்தார்கள். விருந்தினருள் விசேஷ மரியாதையுடன் வருந்தி அழைக்கப்பட்டவர்கள் பங்குவோவும், அவன் மைந்தன் ப்லீயான்ஸுமாம். பங்குவோ விருந்துண்ண அரண்மனைக்கு இராவழி வரும்பொழுது, இடைவழியில் தாப்புக்கொள்ளச் சதிக் கொலைஞரை வைத்து, அவனை மக்பெத் வதைசெய்வித்தான். தந்தைக்கு வந்துற்ற பிராணகண்டம் தனக்கும் வருமுன், அவன் மகன் ப்லீயான்ஸ் தப்பிப் பிழைக்கத் தீவிரகதியாய் ஓடிப் பறந்து மறைந்தான். பின்பு அடியடியாய் அவன் சந்ததியார் தாமே ஸ்கொத்திலாந்தில் அரசுபுரிந்தார்கள். ஆறுவது ஜேம்ஸ் மன்னன் அரசாளுங்காளில் ஸ்கொத்திலாந்தும் இங்கிலாந்தும் ஒரு குடைக்கீழ்ப்பட்டு ஒருங்கிணைந்தன. அவ்வரசனுக்கு இங்கிலாந்தின் முதலாவது ஜேம்ஸ் எனவும் பட்டப்பெயர் மற்றொன்று வழங்கும்.

விருந்துசபையில் மக்பெத் பிராட்டி விருந்தினரைக் கண்டு முகமலர்ந்து, இன்சொற் சொல்லி, ஏற்கும் உபசாரம் யாவும் செய்து, அனைவரையும் உவப்புறுவித்தாள். மக்பெத் பிரபு இஷ்டமாய் அவர்களுடன் கலந்துறவாடி, தன் பிராண இஷ்டன் பங்குவோ அங்கில்லாத குறையை எண்ணி எண்ணி, இதயம் நொந்து வருந்துவான்போல மாயமடித்து, “கனமிக்க துரைமக்கள்-குலமக்களே, இந்நாட்டில் வித்தையும், விநயமும், புகழும், பூச்சியதையுமுள்ளவர்களென்று வியக்கத்தகும் இத்தனைபெயர் எனது மாளிகையில் இந்த நற்றினத்தில் விருந்துண்டு மகிழ்ந்து இனிதிருக்க, நான் பெற்ற பெரும் பாக்கியத்திற்கு ஒரு குறை வந்தது பார்த்தீர்களா? என் விசிதர் பங்குவோ இச்

சபைக்கு வருவாரென்று வழிக்கு வழி பார்த்திருந்தேன்; இன்னம் வரக் காணேன். அவர் என்னைக் கொஞ்சத்தனமாய் எண்ணி, என் சொல்லை அவமதித்து வாராதிருப்பாரானால், அது பெரிதல்ல; அவருக்கு ஏதும் விபத்தே சம்பவித்ததென்று என் செவிக்குச் செய்தி எட்டுமானாலோ, நான் அதைக் கேட்டு, பின்னும் உயிர் வைத்திருக்கும் வகை ஏதென்று அறியேன். பிரபுக்களே, இந்தச் சோபம் தெளிய என்னைத் தேற்றுவார் ஆர்?'' என்று உள்ளக் கவலைக்கடலில் மூழ்கினவன்போல நாக்குளறிச் சொன்னான். இச் சொல் அவன் வாக்கினின்று பிறந்து பிறவாமுன், இடைவழியில் அவன் இரண்டகமாய் ஆள்வைத்துப் படுகொலை செய்வித்த பங்குவோவின் ஆவி அம்மண்டபத்தில் தோன்றி, மக்பெத்திற்கு இட்டிருந்த ஆசனத்தில் உட்கார்ந்தது. மக்பெத்தோ சாமானியனல்ல, மலை சரிந்து நிலைபெயரினும், தன் மனநிலை அழியாத தீரன்; அசநியில் வேதாளம் எதிர்ப்படினும், அஞ்சி அதிர்ந்து புறங்காட்டாமல், அதை அதட்டி அகற்ற வல்ல சூரன். இத் தன்மையுள்ள அவனும் அச்சமயத்தில் ஆவி தடுமாறினான்; செயல் மறந்து தியக்கங்கொண்டான். அந்தக் கோரவடிவைக் கண்டு, துடித்துத் துடித்து மனம் விண்டான். அச்சம் அதிகரித்து ரத்தம் சுண்டி, அவன் முகம் கறுகறுத்தது. ரூபத்தைப் பார்த்த இருவிழியும் இமைக்காதிருக்க, நட்ட கட்டைபோல விறைத்து நின்றான். அவன் பத்தினிக்கும், அங்கிருந்த பிரபுக்களுக்கும் ஒன்றுந் தெரியவில்லை. வெறிதாகிய ஆசனத்தை மக்பெத் கண் இமைக்காமல் உற்றுப்பார்த்தவண்ணமாய் நின்றது கண்டு, அவர்கள் அவனை உன்மத்தனென்று எண்ணினார்கள். தலைவி கிட்டப் போய், ''என் பிராணநாதா, என் கண்ணின் கருவிழியே, என் குடும்பபதியே, டங்கன் மன்னனை வதைசெய்யப் போனபொழுது, வெட்டவெளியில் கட்டாரி கண்டதாகப் பாவித்துப் பதைத்த சித்தப்பிரமை உமக்கு இன்னம் தீரவில்லையா? கண்ட பெயர் நகைக்க, கொண்டபெண் மனம் திகைக்க, உமக்கேன் இந்தப் பேதமை மேலிட்டது?'' என்று அந்தரங்கமாய்க் காதில் ஓதிக் கண்டித்தாள். தோன்றிய ஆவி பின்னும் அவன் கண்ணுக்கு எதிரே நின்றது. மனைவி சொல்லும், பிறர் வாக்கும் அவன் செவியில் நுழையவில்லை. நடந்த கொடிய அந்தரங்கத்தைக் குறிப்பாய் விளக்கிய சொற்களை அவன் பித்தம் கொண்டாற்

போல் ஆவிக்குப் பிதற்றினன். அந்தரங்கத்திற் செய்வித்த கொலைத்தொழில் வரலாறு அவன் வாக்குமூலமாய் அம்பலம் ஏறுமுன், அங்கிருந்த விருந்தினரை அனுப்பிவிடப் பதைத்து, பெருமாட்டிதன் கணவனுக்கு அடிக்கடி இவ்வாறு புத்தி மாறுவது வழக்கமென்று அபத்தம் சொல்ல, அவர்கள் பரிதபித்துச் செலவுபெற்றுப் போனார்கள்.

இந்தப்படி அச்சாதிக்கத்தால் மக்பெத் காணாத காட்சிகளெல்லாம் கண்டான். நாயகன்—நாயகி இருவரும் அயர்ந்த நித்திரையின்றிப் பயங்கரமான சொப்பனம் கண்டு பதறினார்கள். பங்குவோவைக் கொல்வித்த ரத்தப்பழி தங்களைச் சூழ்வதை நினைந்தல்ல, கொலைஞர் கைக்குத் தப்பிப் பிழைத்திருக்கும் அவன் மைந்தன் ப்லீயான்ஸும், அவன் சந்ததியாரும் தங்கள் சந்ததியைத் தெருவீதியில் திக்கற்றுத் திரியத் துரத்திவிட்டு, கிலேசமற்று அரசுபுரிய வருவதை நினைந்தே கொடிய மரணவேதனைப்பட்டார்கள். அவர்கள் மனம் நிலையின்றித் தாமரை இலையில் தண்ணீர்த் துளி போலத் தளம்பிற்று. அவ்வேளையில் மக்பெத் சலிக்கு மனதை ஒரு வழிப்படுத்தி, மாயினிகளைத் தேடித்திரிந்து காணவும், கண்டு இன்னம் ஏதேது பழிவந்து சூழுமோவென்று கேட்டறியவும் நிர்ணயித்தான்.

மாயினிகளைத் தேடி, மக்பெத் இக்கதைமுகத்திற் சொல்லிய சம்பம் புல்வெளியில் ஓர் கல்வளைக்குப் போனன். அதற்குமுன் ஞானதிர்ஷ்டியால் அவன் வரவு அறிந்து, அம்மாயினிகள் பாதாள தேவதைகளை அழைத்துக் குறிகேட்கும் பொருட்டு, வசியம், மோகனம், தம்பனம், உச்சாடனம், ஆகருடணம், வித்துவேடணம், பேதனம், மாரணம் எனும் அஷ்ட கருமத்துள் ஒன்றாகிய ஆகருடணத்திற்குக் கருநூல் விதிப்படி மாயமருந்து செய்துகொண்டிருந்தன. அம்மருந்திற் சேரும் கோரமான கருவர்க்கத்தை நினைக்கவே மனவிதிர்ப்பு உண்டாகின்றது. அவை இவை:—தேரை, துரிஞ்சில், சர்ப்பம், சுபசகுனம்—அபசகுனம் உணர்த்தும் கௌவுளிவிழி, குலைநாய் நாக்கு, பச்சோந்திக்கால், கூகைச்சிறகு, குக்குடசர்ப்பத் தோற்புறச்செதிள், கோனாய்ப்பல், பிராணிகளைக் கூற்றெனக் கொன்று பக்ஷிக்கும் கடற்சுறா இரைக்குடல், மருந்திட்டுப் பதங்காத்த மாயினி உடல், தப்பாமல் உயிர் வதைக்கும்

படுவிஷகாரியாகிய ஹெம்லக் மூலிகை, (இம்மூலிகை இருளில் அகழ்ந்தெடுத்துப் பிரயோகித்தாலன்றிப் பலிக்காது), வெள்ளாட்டுப் பித்து, யூதன்* ஈரல், இடுகாட்டில் வேரூன்றிய யூ எனும் விருக்ஷத்துண்டு, இறந்த பசுங்குழந்தை கைவிரல். — மாயினிகள் இத்தனை கருவகையும் இணைக்கமாய்ச் சேர்த்து, பெருங் கொப்பரையில் இட்டு, அடுப்பேற்றித் தீ மூட்டி எரித்தன. தீ வளர வளர, கொப்பரையில் சூடு ஏறியதனால், அதை ஆற்றும்படி, வானரம் ஒன்றை வெட்டி, வடிந்த உதிரத்தைக் கொப்பரை நனைய ஊற்றின. வெந்த கருவர்க்கம் சுண்டாவண்ணம் தன் குட்டி தின்ற பெண்பன்றி ரத்தம் வார்த்தன. கொலைஞரைத் தூக்கிட்ட மரத்தில் சுடுவெயிலுக்கு உருகி ஒழுகும் ஊன் கொழுப்பை வளர்ந்த தீச்சிகையில் இட்டன. இவ்வாறு நான்முறை பிறழாமற் செய்த வசிய பலத்தால் மாயினிகள் பாதாள தேவதைகளை வரவழைத்து, கட்டிக் குறிகேட்டன.

மக்பெத்தைத் திரும்பிப் பார்த்து, மாயினிகள் "சந்தேகம் தெளிய உனக்கு வார்த்தை சொல்வோர் நாங்களா, எங்களை அடிமைகொள்ளும் தேவதைகளா? உன் இஷ்டம் என்ன? ஒளிக்காமல் உள்ளபடி சொல்லு" எனக் கேட்க, அவன் தன் கண் எதிரில் நடந்த கோரகிர்த்தியங்களைக் கண்டு, எத்துணையும் ஏங்கித் திகைக்காமல், "தேவதைகள் எங்கே? நான் அவைகளைக் கண்டுதான் உங்கள் கேள்விக்குப் பொருந்தும் உத்தரம் சொல்வேன்" எனத் தாட்டிகமாய் மொழிந்தான். அதுகேட்டு மாயினிகள் ஒதுங்கிநின்ற தேவதைகள் மூன்றையும் உபசார வார்த்தை சொல்லி அழைக்க, பிரதம தேவதை சீசகம் தரித்த சென்னி வடிவாகத் தோன்றி, மக்பெத்தைப் பெயர் சொல்லி அழைத்து, "சொல்லக் கேள் அரசனே, பைப் பிரபுவை நால்வரையும்போல நம்பத்தக்க இஷ்டனென்று எண்ணி ஏமாறுதே; எச்சரிக்கையாயிரு" என்று அவனுக்கு மாதா பிதா அடைவாக மனதிரங்கி, நற்புத்தி புகட்டியது. அதன் வாய்மொழி அபத்தமல்ல, யதார்த்தமே. பைப் பிரபு எனும் பட்டப்பெயர் வழங்கியது மக்டப்பிற்கு. அந்த மக்டப்பின்மீது மக்பெத்திற்கு நாட்சென்ற வைரமும், பிறப்பினாலன்றி மறப்பரிய வெங்கண்ணும் உண்டு. தன்

* ஒரு ஜாதியான்.

லேப் பொருள் செய்து, தன் உயிரைச் சத்துருவின் கைக்குத் தப்புவிக்கத் தயாசிந்தை கூர்ந்து, சாக்ஷாத் பாப்பிரமமே பிரசன்னமாகித் திருவாய் மலர்ந்தருளியதுபோல, சமயத்தில் உயிர்க் குறுதிமொழி உரைத்த தேவதைக்கு மக்பெத் மனம் குளிர வந்தனம் சொன்னான்.

அப்பால் மற்றொரு தேவதை உடலெங்கும் உதிரமயமான குழந்தைவடிவாகத் தோன்றி, "மக்பெத், ஒன்று கேள், பயப் படாதே. ஐயமுள்ளமட்டும் பயம் இல்லை. மனுஷர் பயம் உனக் குத் திரணப்பிராயமென்று தள்ளு. தாய் வயிற்றினின்று இம் மண்ணுலகில் உதித்த மானிடன் எவனும் உன்னை ஊறுசெய்ய வல்லவனல்ல. தறுகணனாகவும், சிங்கேற்றைப்போல் ஆக்கிரமமு டையவனாகவும், கருமத்தில் கடைப்பிடி யுடையோனாகவும் நட" என்று அவனுக்கு அபயம் கொடுத்தது. அடுக்களைக் கிணற்றி லே அமுதம் எழுந்தாற்போலே, தெய்வம் உன்னை ரக்ஷிப்பே னென்று கைகொடுத்து உரைத்த அபயவாக்குறுதி கேட்டு, மனம் தேறி, மக்பெத் "அப்படியானால் பிழைத்திரு மக்டப். இனி உனக்கு அஞ்சி ஆத்திரப்படுவானேன்? அதற்கு நிமித்தம் இல்லை; ஆனாலும், உறுதிக்கு உறுதி செய்யும்பொருட்டு, உன்னை நான் பிழைத்திருக்க விடேன்; இது திண்ணமென்று அறி. உன்னைத் தொட்டு அஞ்சுவது வீணச்சமென்று நான் உள்ளம் தேறி, அண் டகோளம் அதிர மேகம் முழங்கினும், அணுவும் கலக்கமற்று அயர்ந்து நித்திரை செய்வேனே" என்று கூறினான்.

அதன்மேல், அந்தத் தேவதை செலவுபெற்றுப் போக, மற் றொன்று சிரசிற் செம்பொன்முடி தரித்த சிங்காரக்குழந்தை வடி வெடுத்து, பெரு விருக்ஷம் ஒன்றைச் சிறு கரத்தாற் பற்றி வெ ளிப்பட்டு "இங்கே வா மக்பெத், சர்ப்பனையால் உனக்கு வினை சூழுமென்று சங்கியாவேசங்கொண்டு வருந்தாதே—மயக்கமற்று மனம் தேறு. டன்ஸினேன் மலையடிவாரமட்டும் எட்டும் பிர்னம் ஆரணியம் நிலைபெயர்ந்து நடைகொண்டு, உன்னோடு எதிர்த்துச் சமர்செய்ய வருமளவும், ஒருபொழுதும் உனக்கு அபஜயம் இல்லை" என்று அச்சம் தொலைக்கும் ஆசைவார்த்தை கூறிற்று. அவ் வார்த்தை கேட்டவுடன் மக்பெத் "ஆஹா! இச்சகுனமே என் மனதிற்கு இதசகுனம்! என்போலும் சுகபோகம் இவ்வுலகில் யா வர் பெற்றார்! தரையில் மலையென உரத்தோங்கி நிற்கும் விருக்ஷ

வனத்தை வேரறப் பெயர்த்து, இங்கென்னிடத்திற்கு விரைவிற் கொண்டுவர வல்லவர் எவர்? எனக்கு இனி அவமிருத்து உண்டென்று எண்ணி, துன்புற நிமித்தம் இல்லை. மண்ணுலகில் மானிடர்க்கு மனதிரங்கி மகேச்சுரன் விதித்த வாழ்நாள் அறுதிவரையில் வாட்டமற்றிருப்பேன்; ஆனாலும், ஒன்று அறிய என் நெஞ்சு பதைக்கின்றது. பங்குவோவின் சந்ததி என் நிலத்தில் ராஜாதிகாரம் செய்ய எந்நாட்சென்றும் இடம்பெறுமா? இம்மாத்திரம் சொல்ல உனக்குச் சாமர்த்தியம் உண்டானால், ஏழையென் மீது இதயம் இரங்கிச் சொல்லு" என்று இரந்து கேட்டான். கேட்கவும், கொப்பரை தரைக்குள் அமுங்கி, குழலொலி, யாழொலியினும் செவிக்கு மிக இனிய கீதம் கேட்டது. மகுடவர்த்தனர் எட்டுப்பெயர் ஒரு நிரையாய் நிழலுருக்தாங்கி, மக்பெத்தின் பக்கத்தில் சென்றனர். அவர்களைத் தொடர்ந்து பங்குவோ நடந்தான். அவன் கைக்கொண்ட பளிங்கில் பின்னும் அநேக மன்னர் பிரதிவிம்பங்கள் தோன்றின. அங்கமெங்கும் செங்குருதி புரண்ட பங்குவோ மக்பெத்தைப் பார்த்து நகைத்து, பளிங்கில் விளங்கிய உருக்களைக் காட்டினான். கண்ட உருக்கள் அத்தனையும் தனக்குப்பின் ஸ்கொத்திலாந்தில் அரசாளும் பங்குவோ சந்ததியென்று மக்பெத் இந்தக் குறிப்பால் அறிந்தான். அம்மட்டில், மாயினிகள் ஆடிப் பாடி, மக்பெத்தை ஆசையோடு உபசரித்து, வந்தனம் சொல்லி மறைந்தன. அந்த நிமிஷங்கொட்டு மக்பெத்தின் மனதில் குடிகொண்ட நினைவுகள் அனைத்தும் கனதிகில் வருத்தும் அறக்கொடிய நினைவுகள்.

மாயினிகளின் பாழியினின்று வெளிப்படவும், முதலில் அவன் செவிப்பட்ட செய்தி இறந்த அரசனுக்கு ஜேஷ்ட புத்திரனும், பட்டத்திற்கு முறைமையான தாயத்தானுமாகிய மால்கம் தன் முடியை வாங்கி, தான் முடிதரிக்கச் சண்டைக்கு எத்தனமாக இங்கிலாந்தில் தண்டு சேர்ப்பதும், அத்தண்டிற் சேர்ந்து அவனுக்குத் துணைநிற்கப் பைப் பிரபு மக்டப் அங்கு விரைந்து சென்றதுமே. இச்செய்திகேட்டு, மக்பெத் காலமும் பலமும் தெரியாமற் குதித்து, கோபம் கதித்துச் சீறி, மக்டப்பின் மாடகூடங்களைத் தாவி, அங்கிருந்த அவன் மனைவி மக்களை வாளால் வீசி அறுத்து வதைத்தான். அவன் குடும்பத்தார்க்கன்றி, குலத்தார்க்கும் இதேகதியாய் முடிந்தது.

செங்கோல் செவ்விதாகச் செலுத்தாத அரசர் தங் கோட்டை கொத்தளங்களைப் பிடிக்கத் தாவடிபோகும் சத்துருவை அச்சுறுத்தி ஜயம் பெறுவது அசாத்தியம். பிரஜைகளால் அவர்களுக்கு வினை சூழ்வதொழிய, துணை இல்லை. இதற்கு மக்பெத்தைத் திர்ஷ்டாந்தமாய்க் கொள்ளலாம். அவன் கூசாமற் செய்த மட்டற்ற குரூரகர்மங்களைக் கண்டு, அவன் கொடுங்கோலால் வருந்தி, அத்தேசத்துப் பிரபுக்கள் அனைவரும் அவனைத் தம் உயிர்க்கு யமனெனப் பாவித்து வெறுத்தார்கள். கட்டாண்மையும் திடகாத்திரமுமுள்ளோர் வெகுபெயர் அவனைப் பஞ்சாய்ப் பறக்கடித்துப் பார் ஆள இங்கிலாந்தினின்று படையெடுத்துச் செல்லும் மால்கம், மக்டப் இருவரோடும் இடைவழியில் போய்ச் சேர்ந்தார்கள். அவனுக்கு அஞ்சி, வெளிகொள்ளத் துணிவற்று, அவரவர் இருப்பிடத்தை விட்டு நீங்காதிருந்த மற்றோர் அந்த வெட்டுணி விரைவில் சமர்க்களத்திற் பட்டானென்பது கேட்டுச் செவிகுளிர மனம் களிகூர்வது எக்காலமென்று எண்ணிப் பதைத்தார்கள். பின்னும் பலர் "கொடுங்கோன் மன்னர் வாழு நாட்டிற் கடும்புலி வாழும் காடுநன்றே" என வனம் போனார்கள். நூதனமாக அவன் சேர்க்கத் தலைப்பட்ட தளம் விரைவிற் சேரவில்லை. ராஜதர்மம் தவறிய அக்கொடியனை இதயம் வெந்து வெறாதவர் எவரும் அங்கில்லை. அன்புகூர்ந்து அவனை அபிமானித்தோரைக் காண்பது அரிது. அவனைக் காணுந்தோறும் குடிகள் இனி இம்மாபாதகன் என்ன வினை செய்வானோவென்று ஐயமுற்று ஏங்கினார்கள். இதெல்லாம் கண்டு, மக்பெத் மதி மயங்கி, மனம் கலங்கி, "நித்திரையில் நான் டங்கன் மன்னனைக் கழுத்தறுத்துக் கொன்றதுபோல் எந்தப் புண்ணியவானாவது என்னுயிரை மடிவித்திருப்பானானால், இப்பொழுது டங்கன் பெற்ற உயர்பதவி பெற்றிருப்பேனே; அவர் சமாதியில் அயர்ந்து துயின்று சுகித்திருக்கிறார்; ராஜதுரோகிகளால் நேரிடும் கெடுதி இனி அவர்க்கு இல்லை. அவர் பட்ட அவஸ்தையிற் கொடிது மற்றென்ன அவஸ்தை உண்டு! கூரியவாள், கூற்றினும் அதிவிரைவில் உயிர்க்கொலை புரியும் கொடுவிஷம், குடிப்பகை, குலப்பகை, அந்நியதேசத்து மன்னர் பகை இவை ஒன்றும் இனி அவரை வருத்தாதே" என்று எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணித் தயங்கினான்.

மக்பெத்தின் மனநிலைத் தடுமாற்றம் இவ்வாறு இருக்கையில், அவன் பத்தினி தான் செய்த மாபாதகத்தை நினைத்தும், அந் நிமித்தம் ஊர் உலகம் தன்னைத் தூற்றி, இந்தச் சண்டாளிக்கு ஊழிவந் தடுத்ததென்று கோபித்து உள்ளூற வெறுத்ததை எண்ணியும், தணல் அடுத்த வெண்ணெய்போல் உருகி வாடி, புல்லும் பூமியும் உள்ளமட்டும் இந்தப் பொல்லாப்பழி சுமக்கவோ பாவி நான் உடம்பெடுத்தேனென்று புலம்பி, பிழைத்திருக்க ஆற்றாமல் தன்னுயிரைத் தானே மாய்த்தாள்; மக்பெத் செய்த மாபாதகங் களில் அவனுடன் கைகலந்தவள் அவள் ஒருத்தியே. தத்தமக் குரிய தர்மங்களைத் தக்கபடி செய்து, பிறர் சுகதுக்கங்களைத் தம் சுகதுக்கம்போலப் பாவித்து நாள் கழிப்பவர்கள் அச்சமற்று ஐயமற்று, ஆவி தடுமாறாமல் அயர்ந்து தூங்கும் அர்த்தராத்திரி யில் மக்பெத், மனைவி இருவரும் கோரமான சொப்பனம் கண்டு, குலைகுலைந்து நலிவுறுவார்கள். தன் மனம் தீரா வெந்துயருக்கு ஆளாயிருக்கும் அவதியிலும் அந்தப் பெண்ணீலி தன் துன்பம் மறந்து, கணவன் மனப்புண்ணை ஒருவாறு ஆற்றக் கருதி, கலக் கமற்றுச் சவலையைத் தேற்றுகின்ற தாயைப்போல் அவனைத் தேற்றி, உரஞ்சொல்வாள். இவ்வாறு தாரத்திற்குத் தாரமும், தாய்க்குத் தாயும், புத்திபுத்தி சொல்ல மந்திரியுமாயிருந்த மனைவி மடியவும், மக்பெத் இனம்பிரிந்த மான்போலும், சிறகு பறிகொடுத்த பற வைபோலும் போக்குத்தாக்கற்று, தன்னந்தனியனாயிருந்து, தன் செயல் மறந்து தளர்ந்தான்.

பிராணபதமான பத்தினி பிரேதலோகத்திற்குச் சென்றதனால், தான் இனி இப்பொய்யுலகில் அவளைப் பிரிந்திருந்து அவதிப் படுவதிலும் தன்னை வெறுத்திருப்பதே இனிதென்று எண்ணினான். அவன் இப்படி எண்ணமிட்டிருக்கையில், படைஜனத்துடன் மால் கம் முடுகிவருகிறானென்று அவன் செவியில் வெடியதிர்ச்சிபோலத் திடீரெனச் செய்தி பிறந்தது. மலை சலிப்பினும் மனம் சற்றும் சலிக்காத மத்தவாரணத்தை ஒத்த மக்பெத் மனைவி மடிந்ததுபற்றி, மாற்றானுக்கு இடைந்து, வமிசத்திற்கு என்றும் வசை நாட்ட உடன்படுவானா? மாற்றானும் படையும் கிட்டிய சத்தம் எட்ட வும், அவனுக்கு முக்காலே மூன்று வீசம் ஒழிந்துபோனதீரம் மீள வும் பிறந்தது. அவன் இறக்கவரினும், மெய்க்கவசம் அணிந்த படி முனைமுகத்தில் நின்று இறக்கப் பிரதிக்கினை செய்தான். மே

னும், மாயினிகள் மொழிந்த வெற்றொலி வாக்குறுதி பொய்க்கா தென்று அவன் மனம்தேறிற்று. "மனுஷரென்று உடம்பெடுத்த எவரும் உன்னை வருத்துவதில்லை. பிர்னம் ஆரணியம் நிலைபெயர்ந்து, டன்ஸினேன்வரையில் வருமளவும் உனக்கு அபஜயம் இல்லை" என அம்மாயினிகள் வாக்கினின்று பிறந்த சொல்லை அவன் மறந்துவிடவில்லை. மேற்படி வனம் நிலைவிட்டுப் பெயர்ந்து வருவது அசாத்தியமென்று அவனுக்குக் கரதலாமலகம்போலக் காணப்பட்டது. ஆனதுகொண்டு, மக்பெத் மகிபன் அரண்வளைக்கும் பகைஞர் ஆற்றலால் அழியாமிக்க அரணிப்புள்ள தன் கோட்டைக்குள் அச்சமற்றிருந்தான். இருந்து மனக்கடுப்புற்று, மால்கம் வரவை எதிர்பார்த்தான். அங்கவன் அவ்வாறிருக்கையில், ஒருநாள் உதிரம் வற்றி, முகம் கருகருகி, அடங்காத அச்சத்தால் அங்கம் நடுங்கி, காவற்படைஞர் தலையாரி ஒருவன் தலையிற் பேன்தெறிக்க விரைந்தோடிப்போய், அரசன் பாதத்தண்டை தீர்க்கதண்டமாய் விழுந்து எழுந்து இருகையும் கூப்பி, நாக்குளறி, "வேந்தர் மணிமுடி உரைஞ்சும் வீரக்கழல் தரித்த விஜயர்க்கு விஜயனாகிய மக்பெத் அரசே! உன் பொற்பாத கமலம் போற்றி; மலை ஏறி நின்று, மாற்றான் படையேறிவருவது காணப் பிர்னம் ஆரணியத்தைக் கண்ணெறிந்து பார்த்தேன். அதோ அவ்வாரணியம் தன் நிலை பெயர்ந்து அசைவுற்றதாக என் கண்ணிலும் கருத்திலும் பட்டது. இப்பூவுலகில் எந்நாளும் எவரும் காணாத இந்தப் புதுமையைச் சமுகத்தில் அறிக்கைசெய்யத் தாமதிக்காது ஓடிவந்தேன்" என்றான். அவன் சொற்கேட்டு மக்பெத்: "அடா! படாந்தரம் அடித்துப் பதைப்பு உண்டாக்கத் துணிவுற்று ஓடிவந்த துஷ்டப்பயலே! முழுமகனாகிய முறியா!* உன் சொல்லில் ஓரக்ஷரமாயினும் பொய்த்தால், உன்னைப் பிடித்து, அடுத்துநிற்கும் மரத்தில் கழுத்திறுகாமல் தூக்கிடுவித்து, பிராணன் போந்தனையும் பட்டினிபோட்டு வாட்டி வற்றடிப்பேன். இது நிஜம். உன் சொற்படி நடந்தாலோ, நீ தப்பினாய். அப்பால் நீ என்னைத் தூக்கிட்டு வதைப்பினும், ஏனென்று கேளேன்" என மொழிந்தான். அப்பொழுது மக்பெத்தின் சித்தம் சலிக்கத் தொடங்கிற்று. மாயினிகள் உபயார்த்தமாய் மொழிந்த வாக்கு வாஸ்தவ

* அடிமைப்பட்டவனே.

மல்லவென்று அவனுக்குச் சந்தேகம் மேற்கொண்டது. பிர்னம் என்னும் வனம் டன்ஸினேன் மலையடிவாரமட்டும் பெயர்ந்து வரு மென்று ஐயமுற நிமித்தம் இல்லையென்று மாயினிகள் வாக்குறுதி சொல்லியிருக்க, அவ்வனம் நிலையிற் பிரிந்து அசைவுற்றதென்று செய்தி வரப்பெற்றதுபற்றி, அவனுக்கு இவ்வாறு சித்தசலனம் உண்டாயிற்று. உண்டாயும், அச்சம் பாராட்டாமல் அவன் "தலை யாரி சொல் மெய்யாமானால், இனி இங்கிருந்து தப்ப வகை இல்லை; நிலவிற்கு ஒளித்துப் பரதேசம் போவாரும் உண்டோ! எனக்குப் போக்கு எங்கும் இல்லை. யுத்தசன்னத்தனாக வெளிப்படுவதே கருமம். பகலவன் ஒளியில் சஞ்சரித்து அலுப்புற்றேன். எனக்கு இனி அந்தியகாலம் அடுத்துவருமானால், அதுவே முத்தி" என்று இவ்வுலகப்பற்று விட்ட துறவிபோல் மொழிந்து, ஆயுதபாணியா கக் கோட்டைவாசல் தாண்டிப் புறப்பட்டான். மாற்றானும் தளத் துடன் மலையாணுள்ள கோட்டை முற்றுகைக்கு எதிர்ப்பட்டான்.

ஆரணியம் நிலைபெயர்ந்து வருவதாகச் சேவகனுக்குத் தோன் றிய விபரீதத்திற்கு நிமித்தம் இது:—மக்பெத்தின் கோட்டை முற் றுகைக்குத் தண்டெடுத்துச் சென்ற மால்கம் தளகர்த்தன் பிர்னம் ஆரணியத்திற் சேர்ந்தபொழுது, படைத்திரட் பெருக்கைப் பகை ஞன் காணுவண்ணம் அவ்வன விருக்ஷங்களில் தழை களையாமல் தலைக்கொரு கொம்பு தறித்து, அவரவர் தலைமறையக் கரத்தில் நிமிரப் பிடித்துச் செல்லும்படி சைந்யங்களுக்குத் திட்டஞ்செய் தான். தளபதி சொற்படி, தண்டுகள் அனைத்தும் தழை செறி கிளை பிடித்து, அணிவகுத்துச் சென்ற தோற்றம் எட்ட நின்று பார்த்த தலையாரி கண்ணுக்கு வனமே நின்ற நிலைபெயர்ந்து கிட்டு வதுபோல் இருந்து, கெடி வருத்தியது. இவ்வாறே உபயார்த்த மாய் மொழிந்த மாயினி வாய்மொழி மக்பெத் எண்ணியதற்கு மாறாக நடந்தேறிற்று. நடந்தேறவே, அவன் நெஞ்சிற் பிறந்த துணிவிற்கு உரமிக்க தாரகமாயிருந்த ஓரங்கம் அறுந்தது.

அப்பால் இருதிறமும் சேனாமுகயுத்தம் சண்டப்பிரசண் டமாய் நடந்தது. மக்பெத் பக்ஷத்தில் அவனுக்குக் கண்ணுக்குக் கண்ணான நண்பரென்று ரசவசனம் சொல்லி நடித்தவர்கள் நிஷ் டூர மன்னனாகிய அவனை நெஞ்சார வெறுத்து, மால்கம், மக்டப் என்னும் எதிரிகளுடன் கட்சிமாறிப்போக மனம் கனிந்திருந்தார்

கள். ஆதலின், அவர்கள் கைத்துணை மக்பெத்திற்கு அனுகூலிக்க வில்லை. அவர்கள் மனம் இவ்வாறு பேதமித்ததனால், காவலர் இல்லாக்கோட்டையை மக்பெத் ஒருவன் பகைஞர் தளசதளத்தின்* கைவசப்படாவண்ணம் காக்கும் வகை என்ன? அவன் காரி யத்தளவில் கையறுந்தவன்போல் இருந்தான். இருந்தும், சம ருக்கு இளைக்காத தளகர்த்தனாகிய மக்பெத் இருவிழியினின்று எதிரிடுவோரைப் படுசூரணமாய் எரிக்கத்தக்க கடுஞ்சினத் தீப் பொறி பறக்க, மிக்க வீராவேசத்துடன் பாய்ந்து விழுந்து பகைஞன் தளத்தைப் பரிதபிக்காமல் கத்தி வீசி, கண்டதுண் டஞ் செய்தான். ஆங்காலம் இருந்து அவன் கைக்கு அரிதில் தப்பிப் பிழைத்த சைந்யங்கள் சிறிது வழிவிலக மக்பெத் மாருத வேகத்துடன் உட்சென்று, மக்டப் மனவலிகுன்றாது அடுபோர் செய்யும் இடத்திற் சேர்ந்தான். சேர்ந்து, மக்டப்பைக் கண் ணுக்கு எதிரே கண்டவுடன், படைமுகத்தஞ்சா வீரநெஞ்சுள்ள மக்பெத் எவருடன் எதிர்ப்பினும், எவர் பகைக்கு ஆளாகினும், மக்டப்பிற்கு ஒருபொழுதும் எதிர்ப்பட வொண்ணாதென்று குரு மந்திரம்போல மாயினி ஓதிய வாக்கை நினைந்து பின்னிடப் பார்த் தான். எள்ளிட இடையின்றித் தளம் அடர்ந்த ரணகளத்தில் ஆரம்பந்தொட்டு விழித்த கண் இமைக்காமல், மனப்பதைப்புத் தீராமல் மக்பெத்தைத் தேடிய மக்டப் கையிழந்த பழம்பொருள் கையகப்பட்டதுபோல் எதிரில் கண்டு, அங்கிங்குத் திரும்ப விடாது தடுத்துப் போர்செய்யப் பொருத்தினான். இருவீருக் கும் பிரசண்டயுத்தம் நடந்தது. தன் மனைவி மக்களை மனதிரங் காமல் மறலிபோல் மாய்த்ததுபற்றி மக்டப் மக்பெத்தை வாய் மதம்பேசி, வடுச்சொல்லி, அங்கபங்க மழித்தான். அவன் குடும்பத்தார் அத்தனைபெயரையும் துடிக்கப் பதைக்க அடித்துக் கொன்று, விலாப்புடைக்க ரத்தம் குடித்து, நாட்சென்ற வைரம் எல்லாம் தீர்த்துக்கொண்டதனால், நேர்ந்த போர்முகத்திலும் பெயர்ந்து விலக எத்தனித்தான். அதற்கு அவனை மக்டப் விட வில்லை. படுகொடியா, யமகாதகா, எரிநரகிற் கடிநாயே, அட சண்டாளா என வாய்க்கு வந்தபடி வைது, ரோஷம் பிறக்க வசை பேசி, சமர் செய்யத் தூண்டினான்.

---

* இராணுவ கூட்டத்தின்.

தூண்டவே, மாதர் வயிற்றிற் பிறந்தோர் எவரும் உன்னை வருத்துவதில்லையென்று மாயினி மொழிந்த அபயவாக்கு மக்பெத்திற்கு அப்பொழுது ஞாபகத்தில் வந்தது. அவன் அதை அஞ்சாப்பட்டயமென நினைந்து, அகம் களிக்க முகம் மலர்ந்து முறுவலித்து, கவிழ்ந்த தலை நிமிர மக்டப்பை ஏற இறங்கப் பார்த்து, "ஏன் பதறிப் பதைத்து வளர்த்திய வார்த்தைகள் படிக்கிறாய், மக்டப், நீ இளக்காரமாய்க் கிட்டி என்னைச் சண்டைசெய்து வெல்ல நினைப்பது வியர்த்தம். அந்தரத்தில் கத்திவீசி ஆகாயத்தை வெட்டி விழுத்தலாகுமா? உன் கத்தி என் காயத்தில் ஒருபொழுதும் ஏருது. மாந்திரிக பலத்தால் அமைந்த இந்தக் காயம் மானிடர் கையால் மாளா வரம்பெற்று வந்ததென்று அறி" என்று இடித்துரைத்தான்.

அதுகேட்டு, மக்டப் "மந்திரத்தில் மாங்காய் விழுமென்று மதிகெட்ட உனக்கு மாயினி ஓதிய சித்திரப்பேச்சைத் திண்ணமென்று எண்ணிச் சீரழியத் துடிக்கும் பேதாய்! அந்த மாயினியைக் கண்டு கேட்பாயானால், பத்து மாசம் சுமந்து பெற்றெடுக்குமுன், மக்டப் தாய்வயிற்றினின்று பருவமுந்திக் கீறியெடுக்கப் பட்டவனென்று அது உன் மயக்கம் தெளியச்சொல்லும்" என்று அந்தரங்கத்தை அவன் செவியிற் புகட்டினான்.

இச்சொற் கேட்கவும், மக்பெத் கடைப்பிடியற்று, மனம் சலித்து, "எனக்கு இவ்வாறு சொல்லும் நா நாசமுறக்கடவது. சித்திரம்பேசும் மாயினிகளும், இந்திரஜாலம் கற்ற அசரீரிகளும் மனதினால் ஒன்றை எண்ணி, வாக்கினால் ஒன்றைப்பேசி, விரகறியா மாந்தர்க்கு ஆசை கொளுத்தி நாசம் வருத்தும் இயற்கையுள்ளன. மாயினி வாக்கை வாஸ்தவமென்று எண்ணி, உய்ய வகையற்று, உலகம் பழிக்க, எதிர்ந்தோர் மகிழ, திக்கற்றவனானேன். அபத்தம்சொல்லும் அவைகள் உபாயார்த்த வாக்கை இனி ஒருகாலும் எவரும் நம்பி ஏமாறாதிருக்கக்கடவர். உன்னோடு எதிர்நின்று யுத்தம் செய்ய இனி என்னால் ஆகாதப்பா" என்றான்.

அப்பால் மக்டப் "அப்படி ஆனால், பிழைத்திரு! நாம் உன்னை நடுத்தெருவில் நிறுத்தி, 'வர்ணப்பலகையில் நிஷ்டூர மன்னனை நீணிலத்து மாந்தர் காண்க' என விளங்கத் தீட்டி, வழிச்செல்

வோர்க்கு அதிசயம் காட்டுவோம்" என்று நிந்தாபூர்வமாய்ச் சொன்னான்.

துயரக்கடலில் அறநனைந்து, ஆசையும் அச்சமும் அற்றிருந்த மக்பெத்திற்கு நாசகாலம் கிட்டியபொழுது, மிக்க துணிவு பிறந்தது. அவன் "இனி நான் இப்பாழுடலை ஓம்பி உயிர் பிழைத்து ஆம் பயன் என்ன! தரைமுகத்தில் தண்டாகாரமாய் விழுந்து, மால்கமின் பாதம் பணிந்து, மானம் அழியவோ! கீழ்மக்கள் திட்டுக்கேட்டு, நாளொருவண்ணம் நையவோ! எதுக்கு இனி இங்கிருப்பது! பிர்னம் ஆரணியம் தன் நிலைபெயர்ந்து டன்ஸினேனுக்கு அடுத்துவரினும், மானிட இயற்கைப்படி மாதர் வயிற்றில் பிறவாத நீ என்னோடு எதிர்ப்பினும், எனது ஆண்மை உள்ளளவும் மானம் காக்க உன்னுடன் மலைந்து ஒரு கை பார்ப்பேன்" என்று பிந்தம் தலைக்கு ஏறியவன் பேசும்வண்ணம் சீறிச் சினந்து, மக்டப்பின்மீது பாய்ந்து விழுந்து பொருதான். இருவரும் மலையொடு மலை தாக்கும்வண்ணம் கடுஞ்சமர் செய்து, அறுதியில் மக்டப் கெலித்து, மக்பெத்தின் தலையைக் கொய்து, பாராளும் உரிமையுள்ள இளவரசனாகிய மால்கமிற்குப் பக்தி விநயத்துடன் காணிக்கையாகச் சமர்ப்பித்தான். அவன் மக்பெத் என்னும் ராஜதுரோகி செய்த புனைசுருட்டால் நாட்டைப் போக்கடித்த ராஜாதிகாரம் கைக்கொண்டு, பிரபுக்களும் பிரஜைகளும் மனமகிழ்ந்தினிது வாழ்த்த, சாத்மிகன் எனும் தன் தந்தை டங்கன் மன்னன் வீற்றிருந்த சிங்காதனம் ஏறி, உண்மைக்கிவனே, நெறிக்கிவனே யென்று உலகம் புகழ அரசாண்டான்.

# பஞ்சதந்திரம்.

## லப்தஹானி

அல்லது

## பேறழிவு.

சோமசன்மா வாசகுமாரரை நோக்கி "இடருற்ற காலையி லறிவு குன்றாதவன் குரங்கு முதலையினின்று விடுபட்டாற்போற் பெருந் துன்பத்தினின்று மீளுவான்" என, சிறுவர்கள் "அஃதெவ் வண்ணஞ் சொல்வாய்" என, ஆசிரியன் சொல்லலுற்றனன்:—

"கங்கைக் கரையி லுவன் மரத்தின்மேற் சுமுக னென்னு மொரு வானரஞ் சிலகாலம் வாசம்பண்ணிக்கொண்டிருக்கையில், அங்கேவந்த வோரிளைத்த முதலையைப் பார்த்து, "நீ யென் கிருகத் துக்கு விருந்தாக வந்தமையா லுனக்கு நாவற்பழந் தருகிறேன்" என்று சில பழங்கொடுக்கத் தின் றத்தியந்த சந்தோஷத்துடனே தன்னிடத்திற்குப்போ யன்றுதொடங்கித் தினந்தினம் வந்து நாலு வார்த்தைகள் பேசிக்கொண் டிரண்டு மந்நியோந்நியமா யிருக்கை யில், ஒருநாண் முதலை சில கனிகள் கொண்டுவந்து தன் னில்லாட் குக் கொடுக்க, அது தின் றக்கனி யமிர்தம்போ லிருக்கக்கண்டு தன் நாயகனைப் பார்த்து, "பிராணநாதா! இந்தத் தித்திப்பான கனிக ளெங்கிருந்து கொண்டு வந்தாய்?" என, ஆண்முதலை, "சுமுகவானர னென்னு மென்னண்ப னெனக்கு நாடோறுங் கொடுக்க நானங்கேதானே யவற்றைப் புசித்துக்கொண்டு வந்தேன், இன்றைக்குத் தின்று மிகுந்ததை யுனக்குக் கொணர்ந்தேன்" என, இம்மொழிகளைக் கேட்டுப் பெண்முதலை, "இத்தீங்கனி தின்பவ னீர லமிர்தத்திற் கொப்பாயிருக்கும், அதைக்கொணர்ந் தெனக் குக் கொடு, அதனா லுன் மூப்புச் சாக்கா டில்லாம லுன்னோடு நெடுங்காலஞ் சுகித்திருப்பேன்" என, இதைக்கேட்டு முசலி "எனக் குயிர்க்குயிரா யிருக்கிற நட்டோனாகிய வானரத்துக்கு நீயே

னிந்தத் தீங்கு நினைக்கிறாய்?" என, அது "நானுனக் ககத்தியமா யிருந்தா லதனீரலைக் கொணர்ந்து கொடு, இல்லாவிட்டா ளுனுயிர் வைத்துக்கொண்டிரேன்" என, ஆண்முதலை, "காதலியே! சகோ தரனினு மித்திர னதிகமாதலா லவனைக்குறித்து நீ யடம்பண்ண வேண்டாம்" என்று மோவாய்க்கட்டையைப் பிடித்து வேண்டிக் கொள்ள, பெண்முதலை, "நீ யென்றைக்கு மென்பேச்சுக்குக் குறுக் குச் சொன்னதில்லை, இன்றைக்குமாத்திர மெனக்குக் குறைச்சல் பண்ணுகிறாய். ஆதலாலிதோ நான் சீவனைவிடுகிறேன்" எனப் பிடி வாதஞ் செய்ய, கரா பெண்ணி னிச்சயத்தை யறிந்து, "அச்சுமுக னெனக்குக் கொல்லக்கூடாதவனாயிருக்கிறான், நீயா பிடித்ததை விடாமலிருக்கிறாய், ஆதலா னிருதலைக்கொள்ளி யெறும்புபோ லாயினேன்" என்று இங்ஙனஞ்சொல்லிச் சுமுகனிடத்திற்குப் போயிற்று. அப்போது சுமுகன், "நண்பனே! இன்றைக்கேன் விசனமா யிருக்கிறாய்?" என, முதலை "மற்றொன்றுமில்லை, உன் மச்சினிச்சி யென்னைப்பார்த்து, "துஷ்டா! நன்றிகெட்டவனே! நீயாராலே சீவனம்பண்ணுகிறையோ வவனை யொருநாளைக்காயினு நமது வீட்டிற் கழைத்துவந்து விருந்திடவேண்டாமா? அவன் வீட் டுக்குமாத்திரம் வெட்கமில்லாமற் போய்ப்போய் நல்லபழங்களைத் தின்னுகிறாயே" என்றிப்படித் திட்டிக் கோபித்தாள். ஆதலா னீயென் வீட்டுக்குவா? உன்னைக்குறித்துப் பலபல பதார்த்தங்க டேடி வைத்துக்கொண்டு வழிபார்த் துட்கார்ந்துகொண் டிருக்கி றாள்" என, வானரம், "நண்பனே! எனக்குத் தண்ணீரில் வரக் கூடாது. நீ என் பிரியமுள்ள மச்சினியை யிங்கே கூட்டிக்கொண் டுவா" என, மகரம், "சுமுகனே! நான் கங்கைக்கரையி லிருக் கிறேன், நீயென் முதுகின்மே லுட்கார்ந்துகொண்டுவா, நோவாமற் கொண்டுபோவேன்" என, அதி னம்பிக்கை வைத்துக் குரங்கப் படியே யுட்கார்ந்துகொண்ட மாத்திரத்தின் முதலை தண்ணீரிற் குதித்துப்போகையில், வானரம் "எனக் கச்சமாயிருக்கின்றது மெள்ளமெள்ள நட" என்றது. அதைக்கேட்டு முதலை, இப்போது சுமுக னம்முடைய சுவாதீனத்திலிருக்கிறான், இனி யிவனுக்கு நங் கருத்தை வெளியிடுவதற்குக் குறையென்ன விருக்கிறது? உரலிலகப் பட்ட துலக்கைக்குத் தப்புமா? என விங்ஙனந் தனக்குட் டீர்மா னித்துக்கொண்டு, "மித்திரா! உன்னிஷ்ட தேவதையை நினை, பெண்சாதியின் பிடிவாதத்தா லுன்னைக் கொல்லக் கொண்டுபோகி

றேன்" என, குரங்கு "நானென்ன பிழைசெய்தேன்?" என, முதலை "நீ நேற்றுக்கொடுத்த நறுங்கனியை யென்மனைவி தின்றதன்மே லித்தன்மையான தீங்கனியைத் தினந் தின்னுகின்ற பாக்கியவானி றல் கேவல மமிழ்தத்தை யொத்திருக்கும்; ஆதலா னீயவனீரலை யெனக்குக் கொணர்ந்து கொடாவிடி னுன் பிராணனை வைத்திரே னென்றாள், அதைக்குறித்துத்தா னுன்னைக் கொண்டுபோகிறேன்" என, அதைக்கேட்டு வானரம் "ஓகோ விப்படியென் றெனக்கு முன் னமே தெரிந்திருந்தா லந்த மரத்தின்மே லொளித்து வைத்திருக்கிற வந்த வீரலை யுனக் கங்கேயே கொடுத்திருப்பேன்; வெறுமிருத யத்தோ டிருக்கையி லென்னை வீணாகக் கொண்டுவந்தாய்" எனக் கிலேசப்பட, அப்போது மகரம், "என் பிராணமித்திரா! அதைக் கொடுத்தா லவள் சந்தோஷமாவாள்" என்று சொல்லி வானரத்தை யதி சீக்கிரத்தின் முன்னிடத்திற் கொண்டுவந்து விட்டவுடனே, வானரங் குதித்து மரத்தின்மே லேறிக்கொண் டின்றைக்குக் காலன் கையிலிருந்து விடுபட்டேனென் றெண்ணிக்கொண் டிருக்கையில், முதலை "மித்திரா! ஈரலைச் சுறுக்காய்க் கொடு; உன்னண்ணியாருக் குக் கொடுத்துவிட்டு வருகிறேன்" எனக்கேட்டு, வானர நகைத்து, "மூடா! துஷ்டா! ஈர லுடம்பைவிட் டிருக்குமா? அஃதிருக்கட்டும், நீ விசுவாசகாதகனாதலா லிங்கிருக்கவேண்டாம், சீக்கிரத்திற் புறப் பட்டுப்போ, உன்னைப்பார்க்க வென்கண் நாணுகின்றது" என்றிங் ஙனஞ் சுமுகன் சொன்னவுடனே முதலை பச்சாத்தாபப்பட்டு நானி வனுக்கு வழியிலுண்மை சொல்லி யிழந்தேன். இப்போது மறுபடி விசுவாசம்வரப் பேசி யிவனைக் கொண்டுபோக வேண்டுமென் றாலோ சித்து, "மித்திரா! நானுன்னைப் பரீக்ஷிக்கலாமென் றிவ்வாறு சொன் னேன், மேலு முலகத்தி னடவாத வுன்பேச்சை நிஜமென்றெண்ணித் திருப்பிக்கொண்டு வரவில்லை. ஈரல் சரீரத்தைவிட்டு வேறிடத்தி லிராதென்பது சிறுபிள்ளைக்குந் தெரிந்திராதா? நானிது விளையாட் டுக்குச் செய்தேன். ஆதலா னீயென்வீட்டுக்குக் கிலேசமும் பயமு மில்லாமல் வா. உன்பொருட் டென்பெண்டாட்டி வழிநோக்கிக் கண்பூத்துப்போகக் காத்துக்கொண்டிருக்கிறாள்" என, சுமுகன் "பசித்தவனது விசுவாசத்தி னம்பிக்கை வைக்கலாகா தென்று பிரியதரிசனனைக் கங்காதத்த னஞ்சி மீண்டுங் காணவில்லை" என, அப்போது முதலை "பிரியதரிசனனுக் கவனே னஞ்சினான்?" என, வானரஞ் சொல்லலுற்றது.

"ஒரு கிணற்றிலிருந்த கங்காதத்த னென்னு மொரு பெருந் தவளையை மற்றைத் தவளைகண் மிகவும் வருத்தப்படுத்திக்கொண் டிருக்கிறதினு லது ராட்டினத் தொண்டி நெறியே வெளியில்வந் திருந்தத் தாயாதிகள் வலியவரும் பலருமா யிருக்கிறூர்கள், இதற் கென்ன செய்வோமென் றெண்ணமிட்டுக்கொண் டிருக்கையில், ஒரு பாம்பின் புற்றைப் பார்த்து, வழிப்போக்கர் காலிற் றைத்த முள்ளை முள்ளாலேயே வாங்குகிறதுபோ லிந்தப் பாம்பை நமது வீட்டுக்குக் கொண்டுபோய்ப் பங்காளிகளைக் கொல்லவேண்டுமென நிச்சயித்து, வளையின் கிட்டவிருந்து பாம்பைக் கூவ, பாம்பவன் மாந்திரிகனோ நம்மைக் கொல்ல வந்தவனோ கூப்பிடுகிறவ னின்னவ னென்று தெரியவில்லை. ஆதலா லிவனை யிங்கிருந்தே கேட்க வேண்டுமென்று தீர்மானித்து, "நீ யார்?" என, மண்டுகம் "நான் காங்காதத்த னென்னும் மண்டுக ராஜன், உன்னைச் சரணமாக வடைந்தேன்" எனக் கேட்டுப் பிரியதரிசனன் "நெருப்புத் துரும்பு களின் சேர்க்கை நில்லாததுபோல நானுன் பரம சத்துருவா யிருக்கையி னீ யிங்கேவந் திந்த விபரீத பாஷணமேன் பண்ணு கிறுய்?" என, கங்காதத்தன் "என்னை மாற்றூர் வருத்துகிறூர்க ளென் றுன்னிடத்திற்கு வந்தேன், நீ யெங்கள் ஜன்ம சத்துரு வென்பது மெய்யேயாஞலும், வலிய பகைவர்களை வைரிகளைக் கொண்டே யடிக்கவேண்டுமென நீதிநூலிருக்கிறது" எனக் கேட் டிச்சர்ப்பம் "என்வர வங்கெப்படிக் கிடைக்கும்?" என, மண் டுகம் "உன்னை நா னழையாசமாகக் கொண்டுபோவேன்" என, அதைக்கேட்டுப் பிரியதரிசனன் "நாம் தீனியைக்குறித் தென் றைக்கும் விசாரப்பட்டுக்கொண் டிருக்கின்றேம். அவ்வாகாரந் தானேவந் தின்றைக்கு நம்மை யழைத்துக்கொண்டுபோக விருக் கையி லாலசியமேன் பண்ணவேண்டும்? வலியவந்த சீதேவியை வேண்டாமென்று தள்ளலாமா வென்று தனக்கு ளாலோசித்துக் கொண்டு தவளையின் பின்னே வர, தவளை யதை யிராட்டினத்தின் வழியாய்க் கொண்டுபோய்த் தன்வீட்டில் வைத்துக்கொண்டது. அந்தப் பாம்பு தவளைகளை யெல்லாந் தின்றது. பிறகு கங்காதத்த னைப் பார்த்து, "மித்திரா! உன் சத்துருக்களை யெல்லாங் கொன்ற படியினு லெனக் கேதாவ தாகாரங்கொடு" என, தவளை "நீ யுன் சிநேகிதன் காரியத்தைச் செய்தா யிப்போது வந்தவழியே வீட் டுக்குப் போகலாம்" என, அதைக்கேட்டுப் பாம்பு "கங்காதத்தா!

அந்தப் பிலத்தில் வேறே யேதாவது வந்து தங்கியிருக்கும், யானங்கேபோ யென்னசெய்வேன்? நீயேயுன் சமுதாயத்திலிருந்து நித்தியமெனக் கொவ்வொரு தவளை கொடுத்துக்கொண்டுவா, இல்லாவிட்டா லுனெல்லாரையு மொருங்கே கொல்லுவேன்" என, இவ் வுத்தரவைக் கேட்டுக் கங்காதத்தன் பயப்பட்டு நிதமொரு தவளை விழுக்காடு கொடுத்துக்கொண்டிருக்கத் தின்று கடைசியி லொரு நாள் கங்காதத்தன் புத்திரனையுந் தின்றது. அதைக் கங்காதத்தன் மனைவி பார்த்து மிகவு மிடும்பையுற்று "கங்காதத்தரே! நீ ரிக்கொடியோனைக் கொண்டுவந்து குலத்தை நாசம்பண்ணினீர். இனி யிவ்விடம் விட்டுப் புறப்படும். இல்லாவிடி லிவனைக் கொலை செய்யச் சூழ்ச்சி செய்யும்" என, இதைக்கேட் டாராய்ச்சி செய்து கொண்டிருக்கையில் பாம்பு "எனக் கேதாயினுந் தின்னக்கொடு" என, கங்காதத்தன் "மித்திரா! நானிருக்கையி னீ நீனிக்கேன் விசாரப்படுகிறாய்? இப்போதென் மனைவியை யனுப்பி வேறு கிணற்றிலிருந் தின்னம் மண்டுகங்களை யழைப்பிக்கிறேன். அது வரையு நீ சும்மா இரு" எனக் கேட்டுப் பிரியதரிசனன் "நீ யெனக் கன்னதாதா, ஆதலாற் பிதாவாக விருக்கிறாய், உடனே தவளைகளை யழைப்பி" என, பின்னர் மனைவியை மற்றொரு கூபத் திற் போக்கி "போனவ ளின்னும் வரவில்லை, நானே போ யநேகந் தவளைகளைக் கொண்டுவருகிறேன், நீ யிங்கே சுகமாக விரு" என்று சொல்லித் தானு மிராட்டினவழியே புறப்பட்டுப் போயிற்று. பின்பு பிரியதரிசனன் றவளைகளைக் குறித்து வழிபார்த்துக் கொண் டங்கேயிருந் தப்படி வெகுநாட் கழிகையில், மற்றொரு வளையிலிருந்த பல்லியைப் பார்த்துப் பிரார்த்தித்து, "ஓ பல்லியே! உனக்குங் கங்காதத்தனுக்கும் மிகவுஞ் சிநேகமாகையா லவ னிருக்கிற விடத்திற்குப் போ யுன்னைப் பிரியதரிசன னழைக் கிறானென்று மினி யுனக்குத் துரோகம் பண்ணினு லெனக் காணையிருக்கிறது, நீ மனதிற் சிறிது மையப்படாதே யென்று மிவ்வாறு சொல்" என, அதனுத்தரவைப் பெற்றுக்கொண் டக் கவுளி கங்காதத்தன்பாற்போ யெல்லாச் செய்தியையுஞ் சொல் லக் கங்காதத்தன் "பசித்தவன் விசுவாசத்தை நம்பலாகாது. நீ போய்ப் பிரியதரிசனனுடனே, துஷ்டா! இனிக் கங்காதத்தன் வாரானென்று சொல்" என, கவுளிபோய்ப் பாம்புக் கிவற்றையெல் லாஞ் சொல்லிற்று. அப்படிப்போல, நான் மீண்டு முன்வீட்

டுக்கு வரேன்" என, இதைக்கேட்டு முதலை "நீ வராவிடி லெனக்கு நன்றிமறந்தமை சம்பவிக்கும், ஆதலா னுன் பட்டினியிருந் துன் னைக்குறித் திங்கேயே பிராணனை விடுவேன்" என, அப்போது வானரமானது "நரி நீள்செவியனுக்கு நம்பிக்கை வருவித் ததை யெப்படிக் கொன்றதோ வப்படி நீயு மென்னைக் கொலைசெய்ய விரும்புகிறாய்" என, முதலை யதைக்கேட்டு, "அஃதெப்படி?" என, குரங்கு சொல்லுகிறது:—

"ஓ ரடவியி லிருக்கின்ற காராளகேசரி யென்னுஞ் சிங்கத்துக் குத் தேகமேதோ குறைமில்லா திருந்தமையாற் றூசானென்னு நரி யைப் பார்த்து, "பிரதானியே! இன்றைக்கெனக் கெங்கும் போகக் கூடாது, நீயேபோ யாதாயினு மிரை கொண்டுவா" என, நரி நாலண் டையு மோடித் திரிகையி லொரு கழுதையைப் பார்த்து, "மாமா! கும்பிடுகிறேன், நீ இப்போது மிகவு மிளைத்துப்போனாய்" என, அப் போது கழுதை, "மருமகனே! என்ன சொல்வேன், எனக்குத் தலை வன் வண்ணான், அவ னத்தியந்தங் கண்டகன், என்மேற் பெருஞ் சுமைகளைப்போட்டுக் கொல்லுகிறதேயன்றி வயிற்றுக்குப் புல்லுச் செத்தைப் போடுகிறதில்லை. புழுதியிலிருக்கு மறுகங்கட்டையைத் தின்றுகொண் டிருக்கிறேன். அஃதுடம்புக் கெங்ஙனம் புஷ்டி கொடுக்கும்? என் பிழைப்பொரு பிழைப்பா" என, நரி "இப்படி யிருந்தால் நீ என்னோடுகூடவா, ஆற்றங்கரையில் பச்சைப்புன் னிரம்ப விருக்குமிட முனக்குக் காண்பிக்கிறேன்" என, அதைக் கேட்டுக் கழுதை "அவ்விட நன்றாயிருக்கும், அங்கே நானொன் றியா யெப்படி யிருப்பேன்" என, தூசரன் "மாமா! அங்கே புருஷ னில்லாமல் விஸ்தாரமாயிருக்கின்ற பெட்டைக் கழுதைக ளெங்க ளுக்குத் தக்க புருஷ னகப்பட்டாற் கொண்டுவர வேண்டுமென் றெனக்குச் சொல்லியிருக்கின்றமையா லுனக்குரைத்தேன்" என, அதைக்கேட் டாசையினாற் கர்த்தபம் பின்னே போக, அதைக் கண்டு சிங்கம் பாய்ந்தவுடனே நீள்செவிய னோட்டம் பிடித்தது; பின்னர் நரி கோபித்துக் கண்டீரவத்தைப் பார்த்து "இன்றைக்குன் வீரத்தை நான் பார்த்தேன், உன்மு னெதிர்ப்பட்ட கழுதையு மோடிப்போயிற்று, இனி நீ யானையை யெவ்வா றடிப்பாய்?" என, அதைக்கேட்டுக் காராளகேசரி தலையிறக்கமா யிருக்க, மீட்டு நரி "மற்று மோர்தர நானவனை யுன்னண்டை கொண்டுவருகிறேன், அப்போதாயினு மேமாறும லவனை யடிக்கவேண்டும்" என்று

சொல்லி, நீள்செவிய னருகேபோய் "நீயே னேடிப்போகிறாய்?" என, கழுதை "மருமகனே, என்னை யிந்நேர மெமன்வாயிற் கொடுத்திருப்பாய், அதிர்ஷ்டத்தினாற் பிழைத்தேன், வச்சிரம்போ னகந்தையுடைய வப்பிராணி யார்?" என, அப்போது நரி நகைத்து "அம்மா னந்தப் பெண்கழுதை யுன்னைப் பார்த்து மிதமற்ற களிப் போடே யுன்னண்டை வருகையி னீ வீணாய்ப் பயந்தோடினாய், அவளிப்போது நீள்செவிய னென்னைக் கலியாணம் பண்ணிக்கொள் ளாவிட்டா ளுனுயிர் வைத்திரேனென்று நிச்சயித்திருக்கிறபடியா னீ வினாவாய் வரவேண்டும், வராவிடிற் பெண்கொலை நேரிடுவ தன்றிக் காமதேவனாலுஞ் சபிக்கப்படுவாய், அவன் முத்திரை சர் வார்த்த சாதனமான ஸ்திரீவடிவா யிருக்கின்றதை யவமானம் பண் ணுகிறவர்களைச் சடைச்சாம்பலாண்டியாக்கிக் காமதேவன் காட்டி லனுப்புவான்" என்றிப்படி நரி யுரைக்கக் கேட்டுக் குண்டுக்கழுதை யதன் பின்னேபோகச் சிங்கந் தட்சணமே யடித்து "நண்டைச் சுட்டு நரியைக் காவல் வைத்ததுபோல" அதற்கு நரியைக் காவல் வைத்து நீராடப்போக, இதற்குள்ளே நரி யதன் னீரலையுங் காதையுந் தின்றது. பின் சிங்கம் வந்து பார்க்கையி லீரலுங்காது மில்லா மையாற் சம்புகத்தைப்பார்த்து, "இதை யார் தின்றது?" என, நரி "இக்கழுதைக் கீரலுங்காது மில்லை, யிருந்தா லது மறுபடியு முன்னண்டை வருமா?" என, அது இதை யுண்மையென்று நம்பி நரிக்குள்ள மாம்சபாகங் கொடுத்து மற்றதைத் தின்றது. அப்படி "நீ யென்னைக் கொல்ல விரும்புகிறாய்" என, முதலை "எவன் றன் பிரயோஜனத்தைவிட் டுள்ளதைச் சொல்லுகிறானோ வவன் யுதிஷ் டிர னென்னுங் குசவனைப்போற் றுன்பமடைவான்" என, வான ரம் "அதெப்படி?" என்று கேட்க, மகரஞ் சொல்லுகின்றது:—

"ஒரு குப்பத்தில் யுதிஷ்டிர னென்னுங் குயவன் பானைகளை யெடுக்கையி லோட்டாங்குச்சி யொன்று கபாலத்திற் றாக்கிக் கத்தி வெட்டுப்போற் காயம்பட்டது. பிறகு சிலநாள்கழித் தத்தேயத் திற் கருப்புவந்தமையா லவன் மறுதேசத்திற்குப்போ யிராஜனிடத் திற் சேவகத்தி லமர, அவ்வரச னவ்வடுவைக்கண் டிவன் போர்க் களத்தின் முன்காயம் வாங்கின சூரனென்றெண்ணி யவனை மிகவு முபசரித் தவனிடத்திற் றயையாயிருந்தான். அதுமுதற்கொண்டு மற்றைச் சேவகர்க ளவன்மேற் பொறாமையா யிருக்கத் தலைப்பட் டிராஜன் றயையிருக்கையா லொன்றும் பேசாமலிருந்தார்கள்.

அப்படியிருக்கையி லொருநா ளிராஜ னேகாந்தமா யுதிஷ்டிரனைப் பார்த்து, "உனக்குக் கத்திவெட்டு யாருடைய சண்டையிற்பட் டது?" என, குசச்சேவகன், "ராஜனே! நான் சூளைபோட்டுக் கொண்டிருக்கையில் விழுந்தோடுபட் டிக்காயம்பட்டது" என, இதைக் கேட்டமாத்திரத்தி லிராஜன் நாணிக் குலாலனைப் பார்த்து, "நான் மோசம்போனேன்; இஃதிரண்டாம் பெயர்க்குத் தெரிவதற் குள்ளே நீ யோடிப்போ, சூரர்கள் கண்டா னீ யுன்னுயிர் காணமாட் டாய்" என, குயவன் "சுவாமி யென் கைகால்களைக் கட்டி ரணரங் கத்திற்போட் டென் னஸ்தலாகவத்தைப் பார்த்தருளும்; வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்று சொல்லலாமோ?" என, ராஜன் "நீ பிறந்தகுலம் போர்க்களத்தில் வருவதன்று, அங்ஙன மாக நீ நரிக்குட்டிபோ லேன் சும்மா துள்ளுகிறாய்? குலைக்கிற நாய் வேட்டை பிடிக்குமோ?" என, குலாலன் "இந்த நரிக்குட்டி யாரி டத்திற் றன்னைப் புகழ்ந்துகொண்டது? சொல்லுமையா" என, அரசன் சொல்லுகிறான்.—

"ஒரு வனத்திற் பெட்டைச் சிங்கத்தோடு கூடியிருந்த சிங் கததுக் கிரண்டு குட்டிக ளுண்டானவுடனே பல விலங்குகளைக் கொன்று தன் பெண்சிங்கத்தின் கையிற்கொடுத் ததைப்பார்த்து, "இப்பிள்ளைகளுக்கு விளுத் தெரிகிறவரைக்கு மிவர்களை நம்பித் தனியே விட்டிராதே" என்று பத்திரஞ்சொல்லி, நித்தியந் தான் மாத்திரம் போய் மிருகங்களைக் கொன்று கொண்டுவந்து கொடுத் துக்கொண் டிருக்கையில், ஒருநா ளதற் கொன்றுங் கிடையாமற் றிரும்பி வீட்டுக்கு வரும்போது, வழியில் கையி லகப்பட்ட வொரு நரிக்குட்டியை யடியாமற் பிடித்துப் பெட்டையண்டை கொண்டு வந்து, "இன்றைக் கிதைவிட வேறொன்றுங் கிடைக்கவில்லை" என, அப்பெட்டை யக்குட்டி மிகவுஞ் சிறியதாயிருக்கிறதைப் பார்த் துத் தன் குழந்தைகளி லொன்றாய்க் காப்பாற்றிக்கொண்டு வருகை யில், அம்மூன்றும் பெரியனவா யொருநாள் காட்டுக்குப் போன போ தங்கொரு யானையைக்கண் டதன்கிட்டப் போகலாகாதென்று சொல்லிவிட்டு நரிக்குட்டி வீட்டுக் கோடிப்போயிற்று; மற்றிரண்டு மதைப்பார்த் ததன்பின்னே வீட்டுக்குவந்து தன்றாயுடனே யந்த நரியின் காரியத்தைச் சொல்ல, நரிக்குட்டி யதைக்கேட்டு மிகவுங் கோபித்து, "நா னிவர்களிலும் சௌரியத்திற் குறைந்தவனோ? இவர்க ளென்னைப் பழித்து நகைப்பானேன்? கூழுக்கு மாங்காய்

தோற்குமா? நா னிவர்களைத் தண்டித் தென் பராக்கிரமத்தைக் காட்டுவேன், கொட்டினாற் றேள் கொட்டாவிட்டாற் பிள்ளைப்பூச்சியா?" என, அதைக்கேட்டுப் பெண்சிங்க நரியை யேகாந்தமா யோரிடத்திற் கொண்டுபோய், "நீ நரிக்குட்டி, உன் குலத்தில் யானையைக் கொல்லுகிற சக்தியில்லை, உன்னை நா னென்பால் கொடுத்து வளர்த்தமையா லிந்தப் பராக்கிரமஞ் சொல்லிக்கொள்ளுகிறாய், இவர்களினி யுன்னை யின்னானென் றறிகிறதற்கு முன்னே நீ புறப்பட்டோடிப்போ; இல்லாவிட்டா லவர்கள் கையி லடியுண் டிறந்து போவாய்" என, அதைக் கேள்விப்பட்டவுடனே சம்புக மோடிப் போயிற்று. ஆதலா னீ குசவனென்று வெளிப்படுவதன் முன்னே விரைவா யிதை விட்டுப்போ" என, அவ னந்த ராஜாவி னுத்தரப்படி யோடிப்போனான்" என, இப்படி முதலையின் பேச்சைக் கேட்டுச் சுமுகன் "ஸ்திரீகளின் கிருத்திரம மொருவருக்குந் தெரியாதாகையா லவர்கள் விசுவாசத்தை நம்பலாகாது" என, முதலை "இதெதினாற் சொல்லுகிறாய்?" என, வானரஞ் சொல்லத்தொடங்கிற்று.—

"தாரா நகரத்திற் குடும்பத்தோடு கூடியிருந்த சத்தியவிரதனென்னும் வேதியன் றன் மனையாட்டி யெல்லாரோடுங் கலகம்பண்ணிக்கொண் டிருக்கையா லவ னவண்மே லிருக்கிற மோகத்தினாற் றன் றேயத்தைத் துறந் தவளை யழைத்துக்கொண்டு தேசாந்தரம் போகையி லவ்வழியில் பார்ப்பினி, "நாயகா! எனக்கு மிகவுந் தாகமெடுக்கின்றது, எங்கிருந்தாயினுந் தண்ணீர்கொண்டுவா" என, அவ னவளை யங்கேயே வைத்துவிட்டுத் தண்ணீர்க்குப் போய்வந் தவளிறந்து பிணமாய்க் கிடக்கிறதைப் பார்த்து மிகவும் புலம்பி வருத்தப்படுகையில் "உன் வயதிற் பாதி யிவட்குக் கொடுத்தாயானால் மீண்டெழுந்திருப்பாள்" என் றாகாசவாணி யுண்டாக, அதைக்கேட்டுப் பார்ப்பான் பவித்திரத்தோடே பாதிவயதை மூன்றுதர முச்சரித்துக் கொடுக்க, அதனா லவள் ஜீவித்தெழுந்து ஜலபானம் பண்ணினாள். பின் பொரு பட்டணத்திற்போ யிறங்கி யந்தணன் செலவு வாங்கக் கடைக்குப் போனபோ தங்கே யொரு முடவ னேற்றியாய்ச் சங்கீதம்பாட, அதைக்கேட் டவண்மோகித் தவனருகிற்போய், "சிநேகா! என்னை யங்கீகாரஞ்செய், இல்லாவிட்டா லுனக்குப் பெண்கொலை வரும்" என, அதைக்கேட் டவனிதோ 'முடவனுக்குக் கொம்புத்தேன் கிடைத்ததே' என்று

பொங்கி யவள் கையைப் பிடித்துக்கொள்ள, அப்போதவள் "இவ் வுடம்பை யுனக்கர்ப்பணம் பண்ணினேன், இனி நீ யையமில்லாம லென்னுடனே கூடவா" என, அப்படியே யம்முடவ னவளண்டை யுட்கார்ந்திருந்தான். இதற்குள்ளே கடைச்சரக்குகள் வாங்கிக் கொண்டுவந்த வப்பிராமணனுக்குச் சமையல்பண்ணி யிலைபோட்டு "இம்முடவனுக்குங் கொஞ்ச மன்னங்கொடுக்கவேண்டும்" எனச் சொல்லி, அவ னுடன்பாட்டினு லம்முடத்துக் கன்னங்கொடுத் திரு வருஞ் சாப்பிட்டபிறகு பார்ப்பனத்தி, "நாயகனே! நீ ரென்னைத் தனியாக விட்டுப் போம்போ தெனக்குத் துணையில்லாமையா லிம்முடவ னெனக்குத் துணையிருக்கட்டும்" என, அதைக்கேட் டந்தணன் "இம்முடவனை யெப்படிக் கொண்டுபோகலாம்?" என, அவள் "நான் முதுகிற் கட்டிக்கொண்டுவருவேன்" என, "நல்லது" என் றவள் கபடத்தை நிஜமென்றெண்ணி யதற்குட்பட்டான். பின் பவனைப் புடைவையிற் சுற்றி முதுகிற் கட்டிக்கொண்டு நடக் கையி லவ்வழியிற் பிராமண னிளைப்பாய்க் கிணற்றங்கரையிற் படுத் துக் கண்ணசர்ந்ததைப் பார்த்து, அம்முடவனிடத் தாசக்தியினால் புருஷனைத் துறவி லுருட்டிவிட்டுச் சனி தொலைந்ததென் றம்முட வனை யொரு பெட்டியில் வைத்து நோவாம லெடுத்துக்கொண்டு தேசாந்தரம் போகையி லங்கே சேவகர்க ளவ டலைமேற் பெட்டி யிருக்கிறதைக்கண் டவளைப் பெட்டித்தலையுடனே யரசன் சமுகத் திற் பிடித்துக் கொண்டுபோய் விட்டார்கள். அப்போ தரசன் பெட்டியைத் திறப்பித்துப் பார்த்து, அதில் முடவனைக் கண்டு, "இவன் யார்? என்ன செய்தி?" எனப் பார்ப்பினியைக் கேட்க, அவள் "இவர் என் பர்த்தா, இவர் நோயாளியா யிருக்கிறதினு லிப்படித் தலையிற் சுமந்துகொண்டு போகிறேன்" என, அரச னதைக்கேட் டவள் கற்புடைமைக்கு மகிழ்ந்து, இவ ளமக் குடன் பிறப்பென் றெண்ணி யவளைத் தன்னிடத்தி னிறுத்திக்கொண்டான். இங்கே யிப்படி யிருக்கையில், அங்கே யவ்வழியிற்போன வழிப் போக்க னொருவன் ருகத்துக்குக் கிணற்றினுள்ளே யிறங்கினபோது விழுந்து கிடக்கிறவனைப் பார்த் திறங்கி யெடுத்து வெளியே விட் டுப்போக, அவனங்கே பங்குவையும் மனைவியையுங் காணாம லங் கங்கே திரிந்து தேடிக்கொண் டந்நகரத்திற்குள்ளே போனான். இவன் வருவதை யவ்விபசாரி பார்த்து வேந்தனுடனே "இதோ வருகிற விச்சண்டாள னென் பதிக்கு விரோதி" என்று முறை

யிட, அவ்வேந்தன் "இவனைப் பிடித்துக் காவலில் வையுங்கள்" எனச் சேவகர்கட் குத்தரவு செய்ய, அவர்க ளப்படியே செய்யத் தொடங்குகையில், அவ னிறைவனைப் பார்த்து, "ஓ வாச சிகா மணியே! நீர் தருமகுண முள்ளவரா யிருக்கின்றீர். ஆகலாற் றேற விசாரியும்" என்று தன் குறைகளை யெல்லாஞ் சொன்னான். அரச னதைக்கேட் டொரு பஞ்சாயத்து நியமித் தவர்களா லிப்பார்ப் பான் குற்றவாளியல்ல னவளே துஷ்டை யென்றறிந்து, அதற்குத் தக்கதண்டனை செய்து வேதியனைச் சமாதானம்பண்ணினான். ஆக லான் மாதர்க ளநர்த்தங்கட்கு மூலமாயிருக்கின்றார்கள். விவே கிக ளவர்கள் பேச்சுக்குக் காதுகொடுக்கலாகாது. அப்பேச்சுக்குக் காதுகொடுத்து முற்காலத்திலே நந்தனராஜ னென்பவனும் வாருசி யென்னும் பிரதானியுஞ் சபைநடுவிலே வீன மடைந்தார்கள்" என, முதலை "அஃதெப்படி?" என, வானரஞ் சொல்லுற்றது:—

"பராக்கிரமசாலியான நந்தனராஜ னென்பவன் துரைத்தனம் பண்ணிக்கொண் டிருக்கையி லவன் மனையாட்டி யேதோவொரு காரணத்தாற் பிணங்கிக்கொண்டதைக் குறித் தரச னெவ்வித சமா தானஞ் செய்துங் கேளாமல் "நீ வாயிற் கடிவாளம் போட்டுக் கொண் டென்முதுகின்மே லென்னை யெடுத்துக்கொண்டு குதிரை போலக் கனைந்தா லுன் பேச்சிற்குச் செவிகொடுப்பேன்" என, அப்போது நிருப னவள் பிரீதிக்காகச் சொன்னவண்ணஞ் செய்ய, அதைப் பிரதானியின் மனைக்கிழத்தி கேள்விப்பட் டவளுங் கோப மாய்த் தன் பதியுடனே பேசாமன் முறுக்காயிருக்க, அவ்வேளை யின் முழுது மறிந்தவனாகிய வாருசி யென்னும் மந்திரி, தன்மனை விக் கெவ்வித மாறுதல் சொல்லியு மவளுடன்படாமல் "நீ தலை மொட்டை யிட்டுக்கொண் டென்னை வலசாரி யிடசாரியாகச் சூழ வந்து சாஷ்டாங்க நமஸ்காரம் பண்ணுவாயானா லுனக்கு நானுட் படுவேன்" என, மந்திரி யவள் பிடிவாதத்துக்காக வங்ஙனஞ் செய்து, மறுநா ளுதயத்திற் சபையில் வந்திருந்த வாசனிடத்திற் குப்போக, அரசன் பிரதானியைப் பார்த்து, "நீ யெதற்காக முண் டனம் பண்ணிக்கொண்டாய்?" என, மந்திரி "மகாராஜா அவர்கள் குதிரையைப்போலக் கனைத்தபடியா லடியேன் மழுங்க மொட்டை யிட்டுக்கொண்டேன்" என, இப்படி யிருவர் பேச்சையுங் கேட்டுச் ஜனங்கள் நடந்த செய்தியெல்லா மறிந்துகொண்டார்கள். ஆத லான் மாதர்களுடைய வநுசித வார்த்தைகளைக் கேட்டு மௌனமா

யிருக்கவேண்டும். அங்ஙனஞ் செய்யா தவரோடு மறுமொழி சொல்லுகிறவன் புலித்தோலைப் போர்த்துக்கொண்டிருந்த கழுதையைப் போற் கிலேசமடைவான்" என, "அதெப்படி?" என்று முதலை வினவ, குரங்கு விடை விடுக்கின்றது.—

"நருமதை யாற்றங்கரையில் புவானி யென்னு மோரேழை வண்ணான் றன்கழுதை தீனியில்லாம னாளுக்குநாளிளைத்துப்போகிறதைக் குறித்து விசனப்பட்டுக்கொண்டிருக்கையி லொருநா ளினையாமற் கிடைத்த புலித்தோலைக் கொண்டுவந்து களிப்புடனே யிரவிலக்கழுதைமேற் போர்த் தூரார் பயிர்களின் மேய்வித்துக்கொண்டிருக்கும்போது, குடிகளிது புலியென்று நினைத்தோடிப்போவார்கள். இப்படி யிருக்கையி லிப்பெருவாயன் மிகவும் பெருத் தொருநாட் பயிரிற் றானியத்தைத் தின்றுகொண்டிருக்கும்போ தொரு பெண்கழுதையின் கூச்சலைக் கேட்டு மிகவும் பெருங்கூச்ச லிடத் தொடங்கிற்று. அப்போதக் கொல்லைக்கார னிது புலியன்றென்று நிச்சயித் ததைப்பிடித் திடிப்பொடிய வடித்தான். ஆதலான் மாதர்களுடனே வீணாகப் பேசலாகாது. இப்படி யிருக்கையி னீ யவளைக்குறித் தென்னைக் கொல்லவிருந்தாய். இஃதுன் குற்றமன்று, விசுவாசகாதகம் பண்ணுத லுன்ஜாதிக்கே யியல்பாயிருக்கின்றது, அது சாதுக்களின் சேர்க்கையாலுங் குணமாகாது; மேலுந் துஷ்டர்கட் குபதேசித்துப் பயனில்லை" என் றிப்படிப் பேசிக்கொண்டிருக்கையில், சலத்திலிருந் தொரு சலசரம் வந்து, "உன் மனையாளெதிர்பார்த்துக்கொண்டிருந்து பட்டினியா யிறந்தாள்" என, அந்த நாராசஞ் செவியி லேறினவுடனே முதலை "நான் கொடியோனுதலா லித்தன்மைய விடரி லகப்பட்டேன், முதல் நண்பனுக்குப் பொல்லாதவ னானேன். இரண்டாவது மனைக்கிழத்தியு மிறந்தாள், வீடுங் காடாயிற்று. இல்லக்கிழத்தி யில்லாத வில்லஞ் சுடலையன்றோ? ஆதலால் மித்திரா! என் பிழையை மன்னி, நானுனக்குத் துரோக நினைத்ததனாற் றீக்குதிக்கிறேன்" என, இதைக்கேட்டு வானரம் "எவள் பேச்சினா னீ கொலைத்தொழிற் கேற்பட்டையோ அவள் சாவைக்குறித் திப்போது கிலேசித் துயிர்விட நினைக்கிறாய், அப்படிப்பட்ட துர்க்குணியின் சாவுக்குக் களிக்கவேண்டும், பதியைவிட்டுப் பிறனுக் குடன்பட் டிருந்ததனாற் முன்னொருத்தியை நரியுஞ் சிரித்தது" என, அப்போது மகரம் "நரி யாரைப்பார்த்து நகைத்தது?" என, சுமுகன் சொல்லுகிறது.—

"சம்பகாவதி நகரத்திற் கிழவனாயிருந்த தேவதத்தனென்னு மொரு சாவகாரியின் பெண்சாதி யந்நிய புருஷர்களிடத்தி லாசை கொண்டிருக்கையிலவ்வவாசைக்கண்டவொருவிடனவளைக்கண்டு "பெண்ணே! என் பெண்சாதி யிறந்தபடியினா னான் மிகவுந் துக்கித் துக்கொண்டிருக்கிறேன், நீ யென் றுக்கத்தைப் பரிகரித்தா லுனக் குப் புண்ணியமுண்டு, உன்னைப் பார்த்து மிகவு மானந்தமாயி னேன்" என, அதைக்கேட் டவள் "உன் மனதி லிங்ஙனமிருந்தா லென்கிழக்கணவன் பணத்தை யெடுத்துக்கொண்டு நீயு நானும் பர தேசத்திற் போய் வாழ்ந்திருப்போம்" என, அவன் "இது மிகவு நல்ல காரியஞ் சொன்னாய், நீ கணப்போதாகிலு மட்டியில்லாம லிக்காரியத்தின் முயற்சிசெய்பலாம்" என, அப்படியே மறுநாள் வெளிச்சேறும் வேளையில் வெகு திரவியங்களை யெடுத்துக்கொண்டு சங்கேதப்படி யிருவருந் தேசாந்தரம் போகையைக்குறித் திருகாத வழி போகையி லங்கே யொரு பேராற்றைப் பார்த்தளவி லவன் பின்னே யிவளை யாராயினுந் தேடிக்கொண் டோடிவந்தாற் பணத் தையு மவளையுங் கொண்டுபோகிறதுமன்றி, நம்முடைய ஜீவனை யும் வாங்குவார்கள். ஆதலா லிவளைவிட்டுப் பொருளைமாத்திர மேமாற்றிக் கொண்டுபோகவேண்டுமென்று மனதிலேயே யாராய்ந்து நிச்சயித்து, பின் பவளை நோக்கி, "இந்நதி மிகவுங் கடினமானது, தண்ணீரு நிரம்ப வருகின்றது. ஆதலான் முன்னே யெல்லாவற்றையு மக்கரையில் வைத்துவிட்டுப் பின்புன்னை நோவாமற் கொண்டுபோ யக்கரை சேர்க்கிறேன்" என, அவள் "உன் மனதின்படி செய்" என, பின்பவளிடத்திருந்த பணமுழுவதும் வாங்கிக்கொண்டு, "என் பிரியநாயகியே! உன் புடவையையு மவிழ்த்துக் கொடுத்தா யானா லுன்னை மறுபடியுங் கொண்டுபோதல் வருத்தமாயிராது" எனச் சொல்ல, அவ ளப்படியே யவிழ்த்துக் கொடுக்க, அதையுங் கைக்கொண் டிவள் வெட்கத்தினா லங்கிங்கோடி யாரோடுஞ் சொல்ல மாட்டாளென் றெண்ணிக்கொண் டபகரித்த பொருள்களோடு கூடப் போய்விட்டான். பிறகவ ளதைப்பார்த்துத் தன் மனதில் வியாகுலித்து நான்செய்த வேலைக்குப் பல னுடனேதானே கிடைத் தது. இதை யக்கிழப்பிணமறிந்தா லென்ன செய்புமோவென் றெண்ணிக்கொண்டு நாணத்தினால் தண்ணீரி லிறங்கி யுட்கார்ந்து கொண் டிருக்கையி லோரிறைச்சித் துணிக்கையை வாயில் கௌ விக்கொண் டோடிவந்த நரி தண்ணீரினின்று துள்ளிக் கரையில்

விழுந்த மீனைப்பிடிக்க நினைத்து வாயிறைச்சியை பூமியில் போட்டுக் கௌவப்போகையி லம்மீன் றண்ணீரிற் குதித்தது. நரி திரும்பி யத்தசையண்டை வருவதற்குள்ளே யதையொரு பருந் தறைந்து போக, இதைப் பார்த்திருந்த வம்மாது சிரித்து, "மாம்சமும் மச்சமும் போனபிறகு வானத்தைப் பார்த்தாவதென்ன?" என, அதைக் கேட்டுச் சம்புகம் "குரோதத்தோடே யெனக்கு நேரிட்டதுபோலவே நீயுமுன் பதியையுஞ் சாரனையுமிழந் திப்போது நிர்வாணத்தோடென்ன வெண்ணமிடுகிறாய்?" என, இப்படி யிருவர்க்கும் வாக்குவாத நடந்துகொண்டிருக்கையி லிஃதவள் கணவனுக்குத் தெரிந்து, அவ னவளை மிகவுந் தண்டித் தோட்டிவிட்டான். ஆதலா லந்தத் துஷ்டையைக் குறித்துச் சோகமுறாமல், முதலாய்! நீ யுன்சாகைக் குப் போ" என, மகரந் தன் வீட்டுக்குப் போனவிடத்தி லங்கே வேறொரு முதலை யிருக்கக்கண்டு, நம்மிடத்தையு மொருவன் கைக்கொண்டான், இதற்குச் சாம பேத தான தண்டங்களி லொருபாயஞ் செய்வதைக்குறித்து நம்முடைய சிநேகிதனைவிடச்சொல்லுகிறவர்களில்லை, அவனையே வினவவேண்டுமென் றுறுதிசெய்து, மீண்டும் நாவன் மரத்தண்டை வந்து சுமுகனைப் பார்த்து, "மித்திரா! 'பட்டகாலிலே படுங் கெட்டகுடியே கெடும்' என்றாற்போல வென்னபாக்கியத்தினு லென் வீட்டையு மொருவன் பிடுங்கிக்கொண்டான், இனி நானென்ன செய்வேன்?" என்று முறையிட, வானரம் "நன்றிகெட்டவனே, எனக்குப் பொல்லாங்கு தேடின நீ மறித்து முட்டாட்டனமா யென்னிடத்துக் கேன்வந்தாய்? மூடனுக் குபதேசித்தா லவன் வீடுடையவனை வீடிழக்கப்பண்ணுவான்" என, முதலை "இதெங்ஙனம்?" என, குரங்கு சொல்லத் தொடங்கிற்று:—

"ஒரு மரத்தின்மேல் கூடுகட்டி யதில் வாழ்ந்துகொண்டிருந்த கின்ற விரண்டு தூக்கணங்குருவி யாலங்கட்டியுடனே கூடப் பெருமழை பெய்கையிற் குளிரினாலே நளிர் பிடித்துப் பல்லுக்கிட்ட நடுங்கிக்கொண் டொரு மரத்தடியி லொதுங்கியிருந்து வருந்துகிற வானரத்தைக் கண்டு, "உனக்குக் கால்கைக ளிருந்துங் குளிர் காற்று முதலிய துக்கத்தை யையையோ நீயேனனுபவிக்கின்றாய், நீயேன் வீடு கட்டிக்கொள்ளவில்லை?" என்றிரக்கத்தாற் சொல்ல, இதைக்கேட் டத்துஷ்டக் குரங்கு "ஊசிமூஞ்சிமூடா! நீ வல்லவனுக்குப் புத்தி சொல்லுகிறையா? எனக்கு வீடுகட்டுகிற சக்தி யில்லை, அதைப் பிரித்தெறிகிற சாமர்த்தியமுண்டு, இதோ பார்"

என்று அதன் கூட்டைப் பிரித்தெறிந்தது. ஆதலால் கீழானோர் கட் குபதேசிக்க லாகாது" என, முதலை "அண்ணே! நான் குற்ற வாளி யென்பது மெய்யே, ஆயினும் பழைய சிநேகித னாதலா லுன்னைக் கேட்கின்றேன்" என, வானரம் "நீ யங்கேபோய்ப் பகையாளியோடு போர்செய், மடிந்தாற் சொர்க்க மடைவாய், வென்றால் வீடடைந்து சுகமுறுவாய், முன்னொரு புத்திசாலி யுத்தமனுக்குக் கும்பிடும், சூரனுக்குப் பேதமும், காரியகாரனுக் குத் தானமும், ஈடானவனுக்குத் தண்டமுஞ் செய்தாற்போலச் செய்யவேண்டும்" என, முதலை "அதெங்ஙனம்?" என, சுமுகன் சொல்லலுற்றது.—

"இம்மலையின்மேற் சதுரனென்னு மொரு நரி பசியுடனே யங் கங்கே திரியுங்கா லொரு செத்த யானையைக்கண் டதன் றோலைக் கிழித் திறைச்சியைத் தின்னும் வல்லமை யதற்கின்மையா லிதங் குட்கார்ந்திருக்கையி லங்கேவந்த சிங்கத்தைக் கண்டு தண்டனிட, அது "நீ யார்?" என, நரி "நான் றங்களடியேன், தாங்களடித்த யானையைக்காத் துட்கார்ந்திருக்கிறேன்" என, சிங்கம் "இது நான் கொன்றதன்று, வேறொருவன் கொன்றெறிந்தானோ, அன்றித் தானாய் மடிந்ததோ, எப்படியிருந்தாலு மதை நான் புசியேன். இதுனக்கு வேண்டுமானா லெடுத்துக்கொள்" என, நரி "சுவாமி! இது யோக்கியந்தான், பெரியோர்க டம்மாண்மையாலே சம்பா திக்கிறார்கள்" என, சிங்க மதைக்கேட்டு வேறொரு வனத்திற்குப் போக, பின்னு மங்கே வந்த வொரு புலியைப் பார்த்து, "அம்மான், நீ யிக்காலன் முகத்தி லேனெதிர்ப்பட்டாய்? இவ்வானையைக் கொன்ற மிருகேந்திர னிங்கே யாதொரு புலிவந்தா லதற்குத் தெரி யாம லெனக்கு வந்து சொல்லுவாயானா லுனதைக் கொன்றெறி வேன். நான் முன்னே யொரு யானையை யடித்து முழுகப்போன விடத்தி லொரு புலி யதை யெச்சில் பண்ணிற்று. அதுமுதலாகப் புலியைத் தேடிப்பார்த்து மகப்பட்டவில்லையென் றென்னுடன் சொல்லியிருக்கிறான்" என, புலியச்சிங்கத்தி னுத்தரவைக் கேட்டு மிகவும் பயந்து, "மருமகனே! எனக்குப் பிராணதானங் கொடு" எனச் சொல்லிக்கொண்டே யோடிப்போயிற்று. மறுபடி யொரு வானரத்தைக் கண்டு, முன்னேவந்த துஷ்டனைக் கும்பிட்டுப் போக் கினேம், இரண்டாமவனைப் பேதித்தோம், இப்போ திதன்கையா லிதைக் கிழிப்பிக்க வேண்டுமென்றிப்படித் தன்னுள்ளே நிச்சயித்

துப் பின்பு "வானரா! நீ நெடுநாளைக்குப்பின்பு வந்தாய், மற்றும் பசித்திருக்கிறாய், எனக்குச் சிங்கங்கொடுத்த விவ்வானை யிறைச்சியை நீ கொஞ்சந் தின்று, சிங்கம் வருவதற்குமுன்னே சீக்கிரமா யோடிப்போ" என, குரங் கதைக் கேட்டு யானையைக் கிழிக்க, அதைப்பார்த்து நரி, "வானரா! சிங்கஞ் சமீபத்தில் வந்தது, இனி நீ விரைவிலோடிப்போ" என, அதைக்கேட்டுக் குரங்கு பறந்தது. பின்பது பிளந்தவிடத்திலிருந்த மாம்சத்தை நரி தின்னுகையி லங்கேவந்த வேறொரு நரியைச் சண்டையிட்டுத் துரத்தித் தான் வேண்டுமட்டு மிறைச்சிகளைத் தின்றது. ஆதலா னீயம்மகரத்தைக் கொன் றுன்வீட்டில் சுகமாயிரு. வேறொரு தேயத்திற் சௌக்கிய மெல்லாங் கிடைக்குமாயினுந் தனக்குச் சிநேக மங்கொருவனு மில்லாவிட்டால் சித்திராங்கன்போற் றீங்குக ளனுபவிக்க வரும்" என, முதலை "சித்திராங்கனுக் கெப்படி யவஸ்தை நேரிட்டது?" என, வானரஞ் சொல்லத் தொடங்கிற்று:—

"அயோத்தியா நகரத்திலிருந்த சித்திராங்கனென்னு மொரு நாய் பஞ்சத்தினாற் சோறு கிட்டாமன் மறுதேயத்திற் சென் றொரு கிருகஸ்தன் வீட்டுக்குப்போ யவ்வீட்டுக்காரி சோறுபோட் டாதரித்ததனா லன்றுமுதல் வெகுநாள்வரைக்கு மங்கேயிருந் தொருநாட் சகஜமாய் வீட்டுக்கு வெளியே வந்தது. வந்தவுடனே யவ்வூர் மற்றை நாய்க ளிதன்மேலே விழுந் தநேகவிடத்திற் கடித் ததனுதிர மாம்சங்களை வெளிப்படுத்தினதினாற் சித்திராங்கன் மிகவுந் துக்கமடைந் தென்ன பஞ்சம் வந்தாலுஞ் சுவயதேசத்தை விட்டு வாலாகாதெனத் தனக்குட் டேறி மீண்டு மயோத்திக் கோடிவந்த மாத்திரத்தி லதற் குறவாகிய நாய்கள் "சித்திராங்கா! அத்தேய மெப்படி யிருக்கிறது?" என, சித்திராங்கன் "அத்தேயஞ் செழிப்பாயிருக்கின்றது, மாதர்களும் தயாசாலிகளா யிருக்கிறார்கள், சுசாதிமித்திரத்துவ மில்லை, ஆதலா லிவ்வவஸ்தை நேரிட்டது" என்றது. ஆனதுகொண்டு தன்னிடத்தி லிருப்பதுபோலச் சுகம் வேறில்லையென்கின்றேன்" என, முதலை யவ்வார்த்தைகளைக் கேட்டுப்போ யவ்வண்ணமே யெதிரியுடனே பொருது தன் வீட்டை மீட்டுக் கொண் டங்கேயே வாழ்ந்திருந்தது. ஆதலாற் பராக்கிரமத்தினாற் பாக்கியம் வழிதேடி வந்தடைகின்றது.